# சமாதானத்தின் தேவன்

“நடந்த சம்பவத்தில் என்னிடத்தில் அநீதி ஏதும் இல்லை என்பதையும் நான் கூறியவைகளினால் பொய் இல்லை என்பதையும் நீங்கள் நன்றாக அறிந்திருக்கின்றீர்கள். அப்படியிருந்தும் நான் ஏன் சமாதானத்தை இழ ந்து இவ்வளவாய் துன்பப்பட வேண்டும்” என்று ஒரு விசுவாசியானவன் தன் மேய்ப்பனானவரிடம் கண்ணீ ரோடு கூறிக் கொண்டான். அந்த விசுவாசியானவனின் நிலைமையை நன்றாக அறிந்திருந்த மேய்ப்பரா னவர் அவனை நோக்கி: மகனே, நீ உண்மையுள்ளவன் என்பதை குறி த்து சாட்சி பகர்வதற்கு நான் தய ங்க மாட்டேன். உன்னை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். அவர் ஒருபோதும் உன்னைக் கைவிட் டுவிடவோ, உன்னை விட்டு விலகவோ மாட்டார். அவருடைய கிருபை என்றுமுள்ளது. அதே வேளையிலே, இந்த உலகத்திலே ஆண்டவர் இயேசுவை நம்பி வாழ்பவர்களுக்கு உபத்திரவங்கள் உண்டாகும். எவ் வளவு அதிகமாக உபத்திரவங்கள் பெருகினாலும், அவை மத்தியிலும், பூரண சமாதானத்தோடு வாழும்படிக்கு, நம்முடைய ஆண்டவராகிய இயேசுதாமே தம்முடைய சமானதானத்தை நமக்கு வைத்து சென்றிரு க்கின்றார். ஆனால், அந்த சமாதானமானது அவருடைய வார்த்தைக்குள் இருக்கின்றது. அதை நம் வாழ்வில் அனுபவிப்பதற்கு அவருடைய வார்த்தை நம்மில் நிலைத்திருக்க வேண்டும். நடந்த சம்பவத்தில் உன் அயலவன் அநீதி செய்தது உண்மை. அந்த சூழ்நிலையிலே, நீ ஆண் டவர் இயேசுவின் வார்த்தையில் நிலைத்திருந்து, அவருடைய வார்த் தையின்படியே நடந்து கொள்வதற்கு பதிலாக, அந்த சூழ்நிலையிலே அவருடைய வார்த்தையைவிட்டு விலகி, இந்த உலகத்தின் போக்கி ன்படி நீ நீதியை நடப்பிக்கும்படி முயற்சி செய்தாய். அதனால், நீ தேவ சமா தானத்தை இழந்து போனாய். இனிமேல் நீ அப்படி நடந்து கொள் ளாமல், தேவ வார்த்தையில் நிலைத்திரு. அப்போது ஆவியின் கனி உன்னிலே நிலைத்திருக்கும் என்று ஆலோசனை கூறினார். பிரியமா னவர்களே, உபத்திரவங்கள் சூழ்ந்து கொள்ளும் போது, உங்கள் விண் ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுத லினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அவருடைய வேளைக் காக காத்திருங்கள். சுயபுத்தியின்மேல் சாராமல், தேவ வார்த்தையில் நிலைத்திருங்கள். எல்லாப்புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங் கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவு க்குள்ளாகக் காத்துக்கொள்ளும்படி இடங் கொடுங்கள்.

**2 தெச 3:16**

**சமாதானத்தின் கர்த்தர்தாமே எப்பொழுதும் சகலவிதத்தி லும் உங்களுக்குச் சமாதான த்தைத் தந்தருளுவாராக.**

**ஜெபம்**: பூரண சமாதானம் தரும் தேவனே, நான் என் வழிகளில் சென்று நீர் கொடுத்திருக்கும் சமாதானத்தை இழந்து போகாதபடிக்கு, எதிரடை யான சூழ்நிலைகளிலும் உம் வார்த்தையில் நிலைத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அருமையான கிருபையின் நாட்கள்

வாழ்க்கையிலே துன்பங்கள் துயரங்கள் சூழ்ந்து கொள்ளும் போது, மனிதர்கள் தங்கள் பெலவீனத்திலே, தங்கள் மனதிலே தோன்றும் வார்த்தைகளை பேசுவதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். சில வேளைகளிலே இக்கட்டான சூழ்நிலைகளிலே சில விசுவாசிகளுடைய வாயின் அறிக்கையும் அவ்விதமாகவே இருக்கின்றது. கிருபை நிறைந்த தேவன்தாமே, ஒருவனும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்பதற்காக, நீடிய பொறுமையுள்ளவராக இருக்கின்றார். அதனால் விசுவாசிகள் தங்கள் சிந்தையில் தோன்றும் அவிசுவாசத்தின் வார்த்தைகளை வாயினாலே அறிக்கையிட்டுவிட்டு, முன்பு போல எப்போதும் தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணிவிடக்கூடாது. நாம் பரிசுத்த வாழ்க்கை வாழ வேண்டும் என்று வேறுபிரிக்கப்பட்டிருக்கின்றோம்."வேறு பிரிக்கப்பட்டவர்கள்" "மறுபடியும் பிறந்தவர்கள்" என்ற நாமங்களை தரித்தவர்கள், பரிசுத்த வேதாகமம் கூறும் வேறு பிரிக்கப்பட்டவர்களுக்குரிய வாழ்க்கை முறையை தழுவிக் கொள்ள வேண்டும். நாம் கிறிஸ்துவை அறிய முன்பதாக இருந்த உபத்திரவங்க ளும், சாவல்களும் நமக்கு உண்டாகும். அது மட்டுமல்ல, நாம் கெட்டுப்போகின்ற பழைய சுபாவங்களைவிட்டுவிட்டு, புதிய மனுஷனுக்குரிய சுபாவங்களை தரித்துக் கொள்ளும் போது, இந்த உலகத்தின் போக்கில் வாழும் மனிதர்கள் எரிச்சலடைந்து, நம் புதிய வழிகளைக் குறித்து நிந்தையான பேச்சுகளை பேசிக் கொள்வார்கள். அதாவது, முன்பு இருந்ததைவிட எதிர்ப்பும் ஏளனமும் பெருகிவரும், அந்த வேளைகளிலே நாம் பழைய சுபாவங்களின்படி பதிலடி கொடுக்கக் கூடாது.மாறாக, நாம் வேறு பிரிக்கப்பட்டவர்களுக்குரியதும், மறுபடி பிறந்தவர்களுக்குரிய துமான சுபாவங்களை வெளிப்படுத்த வேண்டும். புதிய மனுஷனைத் தரித்தவர்களாக வாழ வேண்டும். ஆண்டவரோடு இருந்த யூதாஸ்கரியோத் தேவ ஊழியத்திற்காக வேறு பிரிக்கப்பட்டிருந்தான். ஆனால், அவனோ ஆரம்பத்திலிருந்து கள்வனாகவே வாழ்ந்து வந்தான். கர்த்த ருடைய அழைப்பையும் கிருபையையும் அசட்டை செய்து வாழ்ந்து வந்தான். ஒருநாள் அவன் முடிவானது மிகவும் பரிதாபமாக மாறிவிட்டது. பிரியமானவர்களே, நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் கிருபையின் நாட்களிலே மாம்சத்தின் எண்ணங்களை நிறைவேற்றி தப்பித்துக் கொள்ள வகை தேடாமல், வேறு பிரிக்கப்பட்டவர்களும், மறுபடி பிறந்தவர்களுக்கு முரிய வாழ்க்கை வாழும்படிக்கு ஒப்புக் கொடுப்போமாக.

**எபேசியர் 4:24**

**மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதியமனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்.**

**ஜெபம்**: இந்த உலகத்தின் போக்கிலிருந்து என்னை வேறு பிரித்த தேவனே, அருமையான கிருபையின் நாட்களை பிரயோஜனப்படுத்திக் கொள்ளும்படி பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மனநிறைவுடனான வாழ்க்கை

பொருளாதார நெருக்கடி! நாளாந்த வாழ்க்கையின் பாடுகள் ஓய்ந்து போவதைப் போல தெரியவில்லை. தங்கள் மனம் போன போக்கிலே வாழும் உலகத்தார்களின் வாழ்க்கையோ செழிப்பாக இருக்கின்றது. இவையாவற்றின் நடுவிலும் எப்படி நிம்மதியாக இருக்க முடியும்? என்று ஒரு விசுவாசியானவன், தன் ஏக்கத்தை தன் பாட்டனாரிடம் கூறினார். அவனுடைய பாட்டனார் அவனை நோக்கி: தம்பி, ஓங்கி வளர்ந்திருக்கும் அந்தப் பனை மரத்தைப் பார்! கடும் வெப்பமான நாட்கள், மழையில்லாமல் நிலம் வறண்டு போயிருக்கின்றது. ஆனாலும் குறித்த காலத்தில் அது தன் பலனை கொடுக்கின்றது. அது எப்படி என்று எப்போதாவது நீ சிந்தித்ததுண்டா? கர்த்தருடைய பார்வையிலே நீ அந்தப் பனை மரத்தைவிட விட விசேஷித்தவன் அல்லவா! நீ நம்முடைய பரலோக எஜமானனாகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை உன் இரட்சகராக ஏற்றுக் கொண்டது உண்மை. ஆனால், உன் வாழ்விலே, நீ அவருக்கு கொடுக்கும் கனத்தைவிட, உன் வேலையிலுள்ள எஜமானனுக்கு நீ கொடுக்கும் கனம் பெரிது. முதலாவது, தேவனடைய ராஜ்யத்தையம் அதன் நீதியையும் தேடுங்கள் என்று பரலோக எஜமானன் இயேசு கூறியிருக்க, நீ உன் வேலையை குறித்து அதிகமாய் அலட்டிக் கொண்டு, உன் உலக எஜமானனை எப்படித் திருப்திப்படுத்தி, பதவியுயர்வை பெற்றுக் கொள்ளலாம் என்று இரவிலும், பகலிலும், நடுஜாமத்திலும், அதிகாலையிலும் பிரயாசப்பட ஆயத்தமுள்ளவனாய் இருக்கின்றாய். அதனால், தேவ நீதியின் வழிகளை சமரசம் செய்து வாழ்கின்றாய். கர்த்தருக்கு உன் வழியை ஒப்புக் கொடுத்து, அவருக்காக காத்திரு, அவர் உன் வழியை வாய்க்கச் செய்வார் என்று தன் பேரனானவனுக்கு பாட்டனாவர் ஆலோசனை கூறினார். பிரியமானவர்களே, கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் என்று பரிசுத்த வேதாகமத்தில் காண்கின்றோம். திரளான செல்வத்தினால் உண்டாகும் மகிழ்ச்சியைவிட தேவனுடைய வழியிலே நடக்கும் தேவபிள்ளைகள் பெரிதான மகிழ்ச்சியையும், மனத்திருப்தியையும் அடைந்து கொள்கின்றார்கள். அந்த மனநிறைவானது, கர்த்தரின் நிறைவான வார்த்தையினால் உண்டானதால், உயர்விலும், தாழ்விலும், இன்பத்திலும், துன்பத்திலும் குறைந்து போவதில்லை.

**சங்கீதம் 119:14**

**திரளான செல்வத்தில் களிகூருவதுபோல, நான் உமது சாட்சிகளின் வழியில் களிகூருகிறேன்.**

**ஜெபம்:** மகா வறட்சியான காலத்திலும் பலன் கொடுக்கும்படி என்னை வேறு பிரித்த தேவனே, இரவும் பகலும் நான் உம்முடைய வார்த்தையை தியானித்து அதன் வழியில் நடக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தர் வீட்டை கட்டாராகில்...

ஒரு ஊரிலே வசித்து வந்த செல்வந்தனொருவன், நதியோரமாக ஒரு நிலத்தை வாங்கி, அதிலே இரண்டு மாடிகள் கொண்ட மாளிகை யொன்றை கட்டும்படிக்கு அந்த ஊரிலுள்ள திறமைவாய்ந்த கொத்தனா ரோடு (Mason) ஒப்பந்தம் செய்து கொண்டான். கொத்தனாரும் தாம திக்காமல் வேலைக்கு கூலியாட்களை அமர்த்தி, கட்டுமானப் பணியை ஆரம்பித்தார். அத்திவாரத்தைப் போட்டு, சுவர்கள் கட்டப்பட்ட நிலையில் இருக்கும் போது, அந்த செல்வந்தனின் நண்பனானவன் அவனை சந்திக்கும்ப டியாக அந்த ஊருக்கு வந்தான். அவ னுடைய நண்பனானவன் கட்டிட அமை ப்புக்களிலே தேர்ச்சியும் அனுபவமு மிக்க பொறியியாலாளராக இருந்த தால், அந்த செல்வந்தனை நோக்கி: நண்பா, இந்த ஊரின் நில அமைப்பி ன்படி, நீ போட்டிருக்கும் அத்திவாரம் நிலைக்காது. புயல் காற்றும் வெள்ளமும் அதை உடைத்துப் போடும், உனக்கு கொஞ்ச நஷ்டம் ஏற்பட்டாலும், பெரும் பாதகத்திலிருந்து நீ தப்பித்துக் கொள்ள விரும்பினால், இந்த கட்டிடத்தை உடைத்து, நான் கூறுவதை போல அத்திவாரத்தை போடு என்று ஆலோசனை கூறினான். தன் கவனயீன த்தை உணர்ந்து கொண்ட செல்வந்தனானவன், நண்பனின் நல்ஆலோ சனையை கேட்டு, அதன்படிக்கு மாளிகையை கட்டினான். அதனால் அந்த மாளிகையானது புயல்காற்றிலும், பெரு வெள்ளத்திலும் அசை யாமல் உறுதியாக இருந்தது. பிரியமனாவர்களே, உங்கள் வாழ்க்கை யானது எதின்மேல் கட் டப்பட்டிருக்கின்றது? சில மனிதர்கள் தங்கள் வாழ்க் கையை பலவிதமாக அமைத்துக் கொள்கின்றார்கள். அந்த வாழ்க் கையின் அத்திவாரம் இந்த உலக கொள்கைகள், தத்துவங்கள், கல்வி, செல்வம், அந்தஸ்து போன்ற பற்பல காரியங்களை அடிப்ப டையாக கொண்டு அமைக்கப் டுகின்றது. அவைகள் இந்த உலகத்தால் அங்கீரம் பெற்றுதும், பார்வைக்கு எடுப்பானதாகவும், பேசுவதற்கு அறி வுள்ளதாகவும் காணப்படலாம். ஆனால், அழிவுக்குரியவைகளின்மேல் கட்டப்பட்டவைகள் அநித்தியமானவைகள். அழிவுக்குரியவைகள் அழி ந்து போகும் போது, அதில்மேல் கட்டப்படதும் அழிந்து போய்விடும். அழியாததும், மாசற்றதுமான தேவவார்த்தையின்மேல் கட்டப்பட்ட வாழ் க்கையானது அழிவை காண்பதில்லை. தேவவார்த்தையே நல்ல ஆலோ சனை. தேவ வார்த்தையே வாழ்க்கையின் உறுதியான அத்திவாரமாக இருக்கின்றது. தேவ வார்த்தையானது நித்தியத்திற்குரியதாகையால், அதன் மேல் கட்டப் பட்ட வாழ்க்கையும் நித்தியமானதாகவே இருக்கும்.

**யோவான் 6:68**

**ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே.**

**ஜெபம்:** அழியாமையைத் தரித்துக் கொள்ளும்படி என்னை அழைத்த தேவனே, நித்திய வாழ்வு தரும், அரும் பொக்கிஷமாகிய, உம்முடைய ஜீவனுள்ள வார்த்தையின் மேல் என் வாழ்க்கையை அமைக்க எனக்கு உதவி செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# விளக்கைப் போன்ற வார்த்தை

ஒரு கிராமத்திலே வசித்து வந்த மனிதனொருவன், மாலைவேளையிலே, தன் சின்ன மகனானவனோடு கடைக்கு சென்று வீடு திரும்பும் வேளை யிலே திடீரென கார்மேகங்கள் சூழ்ந்து கொண்டதால், தன் கையிலே நெருப்புப்பந்தத்தை பிடித்துப் கொண்டு, கிராமத்தின் குறுகிய பாதை வழி யாக வீடு திரும்பிக் கொண்டிருந்தார். சின்ன மகனானவனோ, வழமைபோல, பாதையிலே அங்குமிங்குமாக ஓடி விளையாடிக்கொண்டிருந்ததால், அவனுடைய தகப்பனானவர் அவனை நோக்கி: மகனே, இருள் சூழ்ந்துவிட்டது, எனவே பாதை யைவிட்டு விலகிப்போகாமல், இந்த வெளிச்சத்திலே நட என்று அவன் கையைப்பிடித்து நடத்திச்சென்றார். சற்று தூரம் சென்ற பின்னர், சில மின்மினி பூச்சிகளை கண்டு பரவசமடைந்த மகனானவன், தன் தகப்பனின் கையை உதறிவிட்டு, பாதையைவிட்டு விலகி அந்த பூச்சியொன்றை பிடிக்க எத்தனித்த போது, பாதையருகேயிருந்த முள்ளொன்று அவன் கால்களில் ஏறிவிட்டதால், அவ்விடத்திலே விழுந்து, சத்தமிட்டு அழுதான். தகப்ப னானவர் ஓடிச்சென்று அவனைத் தூக்கி, அவன் காலிருந்த முள்ளை மெதுவாக எடுத்தார். அது அவனுக்கு மிகவும் வேதனையாக இருந்தது. பிரியமான சகோதர சகோதரிகளே, இருள் சூழ்ந்திருக்கும் இவ்உலகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கும் நாம், இந்த உலகத்தின் ஆசை இச்சைகளை குறித்து எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தையே நாம் செல்லும் வழிக்கு வெளிச்சமாக இருக்கின்றது. எல்லா சூழ்நிலைகளிலும் நாம் நிதானமுள்ளவர்களாக, அந்த வெளிச் சத்திலே நடந்துசெல்ல வேண்டும். தேவனோடு நடந்து செல்லும், சில தேவ பிள்ளைகள், பழைய வாழ்க்கைக்குரிய மாம்சத்தின் இச்சைகளை காணும் போது, அந்த சிறிய பையனைப் போல, தேவனுடைய வழிநடத்துதலை உதறித் தள்ளிவிட்டு, தங்கள் ஆசைகளை தீர்க்கச் சென்று, தங்களை தாங்களே உருவக் குத்திக் கொள்கின்றார்கள். வேறு சிலரோ, காரணத்தோடேயோ, காரணமின்றியோ, மனிதர்கள் அவர்களை குற்ற ப்படுத்தும் போது, பொறுமையை இழந்து, தேவ வார்த்தையை மறந்து, தங்கள் கோபத்திலே, தீமைக்கு தீமை செய்ய தீவிரித்து விடுகின்றார்கள். நீங்களோ, உங்களை வேதனைக்குட்படுத்தாமல், கர்த்தருடைய வார்த்தை யின் வெளிச்சதிலே நடந்து கொள்ளுங்கள்.

**2 பேதுரு 1:19**

**பொழுதுவிடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்.**

**ஜெபம்:** கரம்பிடித்து நடத்திச் செல்லும் தேவனே, நான் இந்த உலகத்தின் ஆசை இச்சைகளுக்கோ, மாம்சத்தின் எண்ணங்களு க்கோ இடங்கொடுக்காமல், உம் வார்த்தையின் வெளிச்சத்திலே வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பிரகாசிப்பிக்கின்ற மெய்யான ஒளி

ஒரு கிராமத்தின் சந்தை கூடும் இடத்திலே, இரவு நேரங்களிலே, அவ் வழியால் சென்று வரும் சில விவசாயிகள், வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்டார்கள். இப்படிப்பட்ட சம்பவங்கள் தலைதூக்குவதற்கு முன்னராக, அந்த கிராமத்தின் மூப்பர்கள் கூடி, மக்களின் பாதுகாப்பை முன்னிட்டு, கிராமத்தின் மையப் பகுதியிலுள்ள சனசமூக நிலையத்தில் விழிப்புக் குழுவொன்றை ஏற்படுத்தி, தெருவிலே மின்சார கம்பங்களை நட்டு, அதில் பிரகாசமாக ஒளிவீசும் மின்குமிழ்களை பொருத்தினார்கள். கிராத்திலுள்ள பொது மக்களில் பெரும்பான்மையானோர் அதை வரவேற்றார்கள். ஆனால், ஒரு சிலரோ, இத்தனை பணத்தை விரயம் செய்து, இரவு முழுவதும் மின்சாரத்தை வீணாக்க வேண்டும் என்று முறுமுறுத்தார்கள். ஏனெனில் இருளிலே கொள்ளையடிப் பதில் அவர்களும் சம்பந்தமுள்ளவர்களாக இருந்தார்கள். பிரியமானவர்களே, இவ்வண்ணமாக, ஆவிக்குரிய வாழ்க்கையிலும், இருளின் அந்தகாரத்திற்குட்பட்டவர்களிடத்தில் வெளிச்சம் இல்லாதிருப்பதினால் அவர்கள் இடறுதலுக்கேதுவான கிரியைகளை நடப்பிக்கின்றார்கள். அவர்கள் தாங்கள் இடறுவதுமட்டுமல்லாமல், மற்றவர்களையும் இடறப்பண்ணுகின்றார்கள். மேலும் அவர்களின் கிரியைகள்பொல்லாங்கானதாக இருப்பதினால், தங்கள் கிரியைகளை வெளிப்படுத்தும்,மெய்யானஒளியை பகைக்கின்றார்கள். சட்டமில்லாத ஊரிலே குற்றம் என்று ஏதும் இல்லை என்ற பிரகாரமாக, மெய்யான ஒளியானது, இந்த உலகத்தில் பிரகாசிக்காதிருந்தால், பொல்லாத கிரியைகள் என்று ஏதும் இல்லை என்று எண்ணிக் கொள்கின்றார்கள். "நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்" என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். அவரே நம் வாழ்வின் மெய்யான ஒளியாக இருக்கின்றார். நம் இருதயத்தை ஒளியேற்றும் அணையாத தீபமாக இருக்கின்றார். உண்மையின் விளக்கு எரிந்தும், அதன் ஒளியின் அருகில் வாழ விருப்பமில்லாதவர்களின் மனக்கண்கள் குருடாகி இருப்பதினால் அவர்கள் மெய்யான ஒளியாகிய ஆண்டவர் இயேசுவை பகைக்கின்றார்கள். ஏனெனில் "பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான்." மெய்யான ஒளியை காண்பிக்கும் வேத வார்த்தைகளை நீங்கள் எவ்வளவாய் நேசிக்கின்றீர்கள்?

**யோவான் 1:9**

**உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி.**

**ஜெபம்:**பகலிலே நடக்கின்றவன் இடறுவதில்லை என்று கூறிய தேவனே, நான் என் மனதை பிரகாசிப்பிக்கும் பேரொளியாகிய உம்மு டைய வார்த்தையின் வழியிலே வாழ எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

புதன் | மாசி 7

📖 மாலை வாசகம் – சங்கீதம் 51:10

# மனக்கடினமுள்ளவர்கள் யார்?

ஒரு விவசாயியானவன், தன் ஊரிலுள்ள ஒரு நிலத்தை வாங்கியிருந்தான். அவன் வியாபார அலுவலாக சில நாட்கள், பட்டணத்திற்கு செல்ல வேண்டியதாக இருந்தது. அந்த நாட்கள் நிலத்தை உழுது, விதைக்கின்ற காலமாக இருந்தபடியால் தன் மகனானவனை அழைத்து, அவனை நோக்கி: மகனே, அந்தப் புதிய நிலத்தை நன்றாக உழுது, பண்படுத்தி, விதைகளை குறித்த நாளிலே விதைக்க வேண்டும் என்று கூறி, பட்டணத்திற்கு சென்றார். குறித்த நாட்களுக்கு பின், அவர் மறுபடியும் தன் ஊருக்கு வரும் போது, விதைக்கப் பட்ட விதைகள், முளைவிட்டிருந்தால், புதிய வயலானது பச்சைபசேல் என்று காட்சியளித்தது. அதைக் கண்டு அவர் மகிழ்ச்சியடைந்தார். ஆனால் சில நாட்களுக்கு பின்பு, வெய்யில் சற்று கடுமையாக இருந்த போது, வயலின் சில பகுதிகளிலே நன்றாக முளைத்து வந்த கன்றுகள் யாவும் காய்ந்துபோகத் தொடங்கியது. அதை கண்ட விவசாயியானவன், புதிய வயலுக்கு சென்று, அந்த மண்ணின் தன்மையை ஆராய்ந்து பார்த்த போது, அந்த பகுதியிலுள்ள நிலமானது, கற்பாறை போல மிகவும் கடினமானதாக இருந்தது. அதை கண்ட விவசாயியானவன், தன் மகனானவன் அந்த நிலத்தை நன்றாக பண்படுத்தவில்லை என்று அறிந்து கொண்டான். பிரியமானவர்களே, தேவனுடைய வார்த்தையானது சம்பூரணமான விதைக்கு ஒப்பிடப்பட்டிருக்கின்றது. தேவ வார்த்தையை சிலர் ஏற்றுக் கொண்டாலும், அதனால் அவர்களுக்கு பலன் இல்லாமல் போவது ஏன்? ஏனெனில், தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்படும் போது, சிலர் தங்கள் நிலைமையை ஆராய்ந்து பார்த்து பாவத்திலிருந்து மனந்திரும்ப மனதில்லாமல், "இவர் எனக்கே குத்துக் கதை போடுகின்றார்" என்று எரிச்சலடைந்து, தங்கள் இருதயத்தை கடினப்படுத்திக் கொள்கின்றார்கள். இப்படிப்பட்ட மனிதர்கள் கர்த்தராகிய இயேசு இந்த உலகத்திலே வாழ்ந்த நாட்களிலும் இருந்தார்கள். அன்புள்ள கர்த்தர், எவ்வளவாய் சத்திய வேதத்தை அறிந்த மதத் தலைவர்கள் முன்னிலையில் போதித்தாரோ, அவர்களில் பெரும்பான்மையானோர்கள், அவ்வளவாய் மூர்க்கமடைந்து தங்கள் இருதயத்தை கடினப்படுத்தினார்கள். நீங்களோ அப்படிப்பட்டவர்களாக வாழாமல், தேவனுடைய வார்த்தைக்கு செவிகொடுத்து கீழ்படிவுள்ளவர்களாக வாழுங்கள். வாழ்வில் நற்பலனை அறுவடை செய்யுங்கள்.

**எபிரெயர் 3:15**

**இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், கோபமூட்டுதலில் நடந்தது போல உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள் என்று சொல்லியிருக்கிறதே.**

**ஜெபம்:** அன்பின் பரலோக தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர். உம்முடைய வார்த்தைக்கு இணங்கி, மனந்திரும்புகின்ற, உணர்வுள்ள இருதயத்தை எனக்கு தந்து வழிநடத்திச் செல்வீராக. ஆமேன்.

# ஏன் பலனை காணவில்லை?

பணம் அல்ல, பண ஆசையே கண்ணி என்று கூறி, சிலர் செல்வப் பெருக்கை வாஞ்சையோடு நாடித் தேடுகின்றார்கள். வெறிக்கக் குடிப்பதே தவறு, கொஞ்சமாக குடித்தால் என்ன? என்ற விவாதத்தை எழுப்பும் தொனிகள். திரைப்படங்களை பார்த்தாலும் நன்மையை எடுத்துவிட்டு, தீமையை விட்டுவிட வேண்டும் என்று நெறிகெட்ட திரைப்படங்களை ஆர்வத்தோடு பார்த்து ரசிக்கும் குழுக்கள். வேறு சிலர், ஊரோடு ஒத்தோடு, உலகத்தை விட்டு வாழ முடியாது, என்று அந்நிய காரியங்களில் துணிகரமாக பங்கேற்கின்றார்கள். இவர்கள் இருளுக்கும் ஒளிக்கும் ஐக்கியத்தை ஏற்படுத்த முயற்சி செய்யும் பரந்த மனமுள்ள மனிதர்கள் என்று தங்களை எண்ணிக்கொள்கின்றார்கள். இப்படிப்பட்ட போக்கையுடையவர்கள், தாங்கள் பெற்றுக் கொண்ட சுதந்திரத்தை தங்கள் துர்குணத்திற்கு மூடலாக உபயோகித்து, சத்தியத்தின் வழியில் நடப்பவர்களோடு வாக்குவாதங்களை ஏற்படுத்துகின்றார்கள். தங்கள் தெரிவுகளின் விளைவாக, தங்கள் இருதயத்திலே உலக ஆசைகளும், ஐசுவரியத்தின் மயக்கமும், குடிகொள்ள இடங்கொடுக்கின்றார்கள். இப்படிப்பட்ட இருதயதயமுடையவர்களே முட்செடியுள்ள நிலத்திற்கு ஒப்பாயிருக்கின்றார்கள். இவர்கள் தேவனுடைய வார்த்தையாகிய விதை வளர்ந்து முளைப்பதற்கு இடங்கொடுத்தாலும், இருதயத்திலே படர்ந்து வளர்ந்திருக்கும் முட்செடிகளை அகற்றுவதற்கு இணங்காதவர்களாகதத்துவ பேச்சுள்ளவர்களாக மாறிவிடுகின்றார்கள். அதனால், தேவனுடைய வார்த்தையை கேட்கின்றார்கள், உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப்போடுகிறதினால் பலனற்றுப் போய்விடுகின்றார்கள். ஒருவேளை இவர்கள் “இரட்சிக்கப்பட்டவர்கள்” என்ற பெயரை தங்களுக்கு சூடிக்கொண்டாலும், இரட்சண்யத்தின் சந்தோஷம் இல்லாமலும், தேவவார்த்தையினால் உண்டாகும் மேன்மையான பலனை வாழ்வில் காணமுடியாமல், பின்மாற்றமான வாழ்க்கைக்கு தங்களை ஒப்புக்கொடுத்து விடுகின்றார்கள். பிரியமானவர்களே, பல ஆண்டுகள் பிரயாசப்பட்டும் அதன் பலனை காணமுடியாமல் இருக்கின்றதா? தேவ வார்த்தையின் வெளிச்சத்தில் உங்கள் இருதயத்தை நீங்களே ஆராய்ந்து பாருங்கள். கிருபையின் நாட்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுங்கள்.

**லூக்கா 21:34**

**உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்தநாள் உங்கள்மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்.**

**ஜெபம்**: பரிசுத்த வாழ்வு வாழும்படி என்னை வேறு பிரித்த தேவனே, இந்த உலகத்தோடும், மாம்ச இச்சைகளோடும் சமரசம் செய்யும் வாழ்க்கை வாழாமால் உம் வார்த்தையின்படி வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வழியோரம் விழுந்த விதைகள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த முதலாளியொருவன், தன் பிழைப்புக்காக சத்திரமொன்றை நடத்தி வந்தான். அந்த ஊரைக் கடந்து பட்டணத்திற்கு போகின்றவர்களும், பட்டணத்திலிருந்து திரும்புகின்றவர்களும் தங்கி செல்வதற்கு அது வசதியான இடத்திலே அமைந்திருந்தது. நாளடைவிலே, அந்த சத்திரத்திலே, குடித்து வெறித்து பலவிதமான களியாட்டங்களிலே ஈடுபடுகின்றவர்களும், சட்டவிரோதமாக வியாபார செயல்களை நடப்பிக்கின்றவர்களும், கள்வர்களும் அந்த சத்திரத்தில் தங்கி வந்ததை அந்த ஊரின் ஜனங்கள் அவதானித் தார்கள். அந்த முதலாளியின் நண்பனொருவன், அவனை நோக்கி: நண்பனே, முன்புபோல அல்ல, இப்போது உன் சத்திரமானது பலவிதமான சட்ட விரோதமான தீய செயல்களை நடப்பிப்பதற்கான மையஸ்தானமாக இருப்பதையும், இது உன் பிள்ளைகளுக்கும், சமுதாயத்திலே வாழும் இளைய தலைமுறைக்கும் பல பாதிப்புக்களை கொண்டு வரும் என்பதையும் நீ அறியாதிருக்கின்றாயா என்று கேட்டான். அதற்கு முதலாளியானவன்: இங்கே பார்! அவர்கள் என் வாடிக்கையாளர்கள். என் வியாபாரத்திற்கு அவர்கள் மிகையான இலாபத்தை கொண்டு வருகின்றார்கள். அவர்கள் கெட்டழிந்தால் அது அவர்களுடையபாடு. சட்டவிரோதமான செயல்களை பார்ப்பதிற்கு நான் அவர்களுடைய அதிகாரியல்ல என்று தன்னுடைய நிலையை நியாயப்படுத்திக் கொண்டான். அந்த மனிதனானவனுடைய சத்திரத்தைப் போல சில மனிதர்களுடைய இல்லமும் உள்ளமும் காணப்படுகின்றது. எப்படிப்பட்ட மனிதர்களோ, எத்தகைய சிந்தனைகளோ, உள்ளே வந்து போவதற்கு, அவர்கள் இல்லத்திலோ, உள்ளத்திலோ வரையறை போடும் எல்லையோ காவலோ இல்லை. அதனால் அவர்கள் இருதயம் உணர்வற்று போய்விடுகின்றது. அதாவது, இப்படிப்பட்டவர்களின் இருதயமானது வழியோரத்திற்கு ஒத்திருக்கின்றது. வழியோரத்திலே விழுந்த விதைகளை பறவைகள் விரைந்து பட்சித்துப்போடுவதுபோல, உணர்வற்று வாழும்இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பொல்லாங்கன் பறித்துக்கொள்ளுகிறான். பிரியமானவர்களே, உங்கள் இருதயம் எந்த நிலையிலுள்ளது? நீங்கள் வேத வார்த்தைகளை கேட் கும் போது, அவை உங்கள் இருதயத்தில் நல்ல மாற்றங்களை உண்டு பண்ணுகின்றதா? உள்ளான மனிதன் நாளுக்கு நாள் புதிதாக வேண்டும் என்ற உணர்வு பெருகுகின்றதா? அப்படியில்லாதிருந்தால் உங்களை நீங்களே ஆராய்ந்து பார்த்து உங்கள் வழிகளை செம்மைப்படுத்துங்கள்.

**சங்கீதம் 139:23**

**தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும்.**

**ஜெபம்:** வார்த்தையை அனுப்பி குணமாக்குகின்ற தேவனே, உம்முடைய வார்த்தையை நான் கேட்கும் போது, அதன் மேன்மையை உணர்ந்து அதை என் வாழ்வில் கைக்கொள்ள உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பாதுகாப்பின் வேலி

ஒரு தோட்டத்தின் சொந்தக்காரனொருவன், நிலத்தை நன்றாக பண்பபடுத்தி, விதைகளை விதைத்து, தன் தோட்டத்திற்கு வேலியடைத்து அயராமல் பிரயாசப்பட்டு பராமரித்து வந்தான். அது ஒரு வளமிக்க தோட்டம் போல காட்சியளித்தது. பலன் கொடுக்கும் நாட்கள் வந்தபோ தோ, அவன் தன்னுடைய பிரயாசத்திற்கேற்ப பலனை அடையாமல் போனதைக் குறித்து மனவேதனையடைந்தான். அதற்கான காரணம் என்ன என்று அறிய விரும்பினான். தன் தோட்டத்திலுள்ள வேலியில் சில இடங்களிலே சிறிய இடைவெளிகள் இருப்பதை கண்டு கொண்டான். அவன் வேலி போடும் போதும், அதை கண்டிருந்த போதும், அதை பின்பு பார்ப்போம் என்று விட்டு சென்றது அவன் ஞாபகத்திற்கு வந்தது. அந்த சிறிய திறப்பின் வழியாக, சிறிய நரிகள் உட்புகுந்து அவன் அடைய வேண்டிய பலனை கெடுத்துப் போட்டது. பிரியமான சகோதர சகோதரிகளே, விசுவாச மார்க்கத்தாரு டைய வாழ்க்கையில் இதற்கொத்த காரியங்கள் நடைபெறுவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆண்டவர் இயேசுவை ஏற்றுக் கொண்ட நாள் முதல், தங்கள் பரிசுத்த வாழ்க்கையை காத்துக் கொள்ளும்படி பிரதிஷ்டையோடு வாழ்ந்து வருகின்றார்கள். அனுதினமும் வேதத்தை வாசித்து, தியானித்து, ஜெபித்து வருகின்றார்கள். சபை கூடி வருதலை விட்டுவிடாதிருக்கின்றார்கள். ஆனாலும், பழைய நண்பர்களோடு சில தொடர்புகள், விட்டு வந்த பழைய காரியங்கள், தங்கள் வாழ்க்கையிலே உள் நுழைவதற்கு தங்கள் வாழ்க்கையிலோ அல்லது தங்கள் பிள்ளைகளுடைய வாழ்க்கையிலோ சிறிய இடைவெளிகளை திறந்து விடுகின்றார்கள். அந்த இடைவெளிகள் பார்வைக்கு அற்பமானதும், இவர்களுடைய பெலத்திற்கு அடங்கியிருப்பதுபோலவும் காட்சியளிக்கும் ஆனால், குறித்து காலத்திலே அவை வாழ்க்கையின் பலனை முழுமையாக அடையக்கூடாமல், விளைச்சலை கெடுத்துப் போடுகின்றது. பிரியமானவர்களே, கர்த்தர் உங்கள் வாழ்க்கையிலே போட்டிருக்கும் எல்லையை உடைத்துப் போடாதிருங்கள். தேவசெய்திகளை அசட்டை செய்யாதிருங்கள். சிறிய காரியம் என்று வேதம் கூறும்லோசனைகளில் சிறியதொன்றையும் அற்பமாக எண்ணாதிருங்கள். அவரு டைய வார்த்தையே நம்மைக் காத்துக் கொள்கின்றது. பிரயாசத்தின் பலனை கண்டடையும்படிக்கு கர்த்தருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.

**நீதிமொழிகள் 4:23**

**எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்.**

**ஜெபம்:** அன்பின் தேவனே, அற்பமான காரியங்களுக்காக மேன்மையானவைகளை நான் இழந்து போகாதபடிக்கு, உம்டைய வாக்கை என் இருயத்திலே காத்துக் கொள்ள எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மனநிலை

ஒரு பெற்றோர் தங்கள் மகளானவலுடைய திருமண நாளை முன்னிட்டு வீட்டிலே பல ஆயத்தங்களை செய்து வந்தார்கள். திருமணத்திற்கு முன் இராத்திரியிலே, வீட்டில் வருகை தந்திருந்தவர்களின் யாரோ ஒருவரின் கவனயீனத்தினால், திருமணத்திற்காக அழகாக அலங்கரிக்கப்பட்ட பெரிய பூச்சாடியொன்று விழுந்து உடைந்து விட்டது. தகப்பனானவர் அதை அறிந்து கொண்டால், அந்த நல்ல நாட்களிலே வீட்டிலே நிச்சயமாக குழப்பம் ஏற்படும் என்று அறிந்த தாயானவள், அவர் வீடுதிரும்ம் முன்பதாக, தங்கள் அயலிலேயுள்ளவர்களின் வீட்டிற்கு விரைந்து சென்று, நிலைமையை எடுத்துக் கூறி, அவர்கள் வீட்டிலிருந்த பூச்சாடியை சில நாட்களுக்கு தரும்படியாக கேட்டு, அதை கொண்டு வந்து, முன்புபிருந்தது போல அலங்கரித்து வைத்தாள். ஏனெனில், அதை யார் செய்தார்கள்? ஏன் செய்தார்கள்? எப்படிச் செய்தார்கள்? என்று ஆராய்ந்தறிகின்ற நேரமானது இதுவல்ல என்று அந்தத் தாயானவள் நன்கு அறிந்திருந்தபடியால், தன்னுடைய மகளானவளின் திருமணம் மனக் குழப்பத்தோடு நடைபெறக்கூடாது என்று தீர்மானித்தவளாய், குழப்பமேற்படும் காரணிகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்ற மனநிலை உடையவளாக இருந்தாள். நித்திய வாழ்விற்கென்று அழைப்பைப் பெற்ற சகோதர சகோதரிகளே, நாம் மணவாளன் வரஆயத்தமுள்ளவர்களாக காத்திருக்கும் மணவாட்டிகளைப் போல வாழ வேண்டும் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். இந்த உலகிலே வாழும் நாம், நம்முடைய குடும்ப, சபை வாழ்க்கையிலே குறைகளை எதிர்நோக்கும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் உண்டாகுவதுண்டு. அந்த சூழ்நிலைகளிலே, குறைகளை பெரிதாக்கி பிரச்சனைளை பெரிதாக்கிவிடும் மனநிலையுடையவர்களாக இருக்கின்றீர்களா அல்லது பிரச்சனைகளை தணிக்கும்படி குறைகளை நிறைவாக்கும்மனநிலையுடையவர்களாகஇருக்கின்றீர்களா? சில வேளைகளிலே சிலர் அற்பமான காரியங்களை சகித்துக் கொள்ள முடியாமல், அவைகளை பெரிதாக்கிவிடுவதினாலே, குடும்பங்களிலும், சபைகளிலும் பெரிதான குழப்பங்களை ஏற்படுத்தி விடுகின்றார்கள். அதனால் உண்டாகும் பின்விளைவுகள் மனவேதனைக்குரியவைகளாக மாறிவிடுகின்றது. ஐக்கியத்தில் குறைகளை நிறைவாக்கின்றவர்களாகவும், சமாதானத்தை நாடித் தேடுகின்றவர்களாகவும், அதற்காக ஜெபிக்கின்றவர்களாகவும் காணப்படுவோமாக.

**2 கொரிந்தியர் 10:4**

**எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது.**

**ஜெபம்**: பெலவீனமான நேரத்திலே பெலன் தந்து வழிநடத்தும் தேவனே, குறைவுகளை நிறைவாக்க வேண்டும் என்ற மனநிலையானது என்னில் எப்போதும் இருக்க உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# விலையேறப்பெற்ற ஆத்துமா

பல வருடகாலமாக நல்ல சாரதியாக இருந்து வந்த மனிதனொருவன், ஒரு புதிய மோட்டார் வண்டியை கொள்வனவு செய்தான். சில மாதங்களுக்கு பின்பு, அந்த மோட்டார் வண்டியை வீட்டிலிருந்து ஓட்டிக் கொண்டு செல்லும் போது, வாகனத்தின் இயந்திரத்தின் பக்கமாக இருந்து அசாதாரணமான சத்தம் வருவதைக் கேட்டு, நெடுஞ்சாலைக்கு செல்லவதற்கு முன்னதாக, உடனடினடியாக அந்த வாகனத்தை இடை நிறுத்தி பரிசோதனை செய்தான். பின்னர், இந்த வாகனத்தை இந்த நிலையில் நெடுஞ்சாலையில் ஓட்டிச் சென்றால், பாரிய விளைவுகள் ஏற் டலாம் என்று அறிந்தவனாய், தன் வாகனத்தை பழுது பார்க்கும் இயந் திர வல்லுநரிடம் (Mechanic) எடுத் துச் செல்வதற்குரிய ஏற்பாடுகளை செய்தான். அந்த சாராதியானவன் ஞானமுள்ளவனாய் விபரீதங்கள் வருமுன் காப்போம் என்ற மனநிலையுடையவனாக இருந்தான். பிரிய மான சகோதர சகோதரிகளே, உங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கை யிலே, வழமைக்கு மாறான சத்தங்கள் தொனிக்கும் போது நீங்கள் அதை எப்படி கையாளுகின்றீர்கள்? சில சூழ்நிலைகளிலே உங்கள் மனதிலே பெரு நெருப்புப் போல கோபம் வரும் போது அந்தக் கோப த்தோடு கிரியைகளை உடனடியாக நடப்பிக்க முற்படுகின்றீர்களா? மன திலே கசப்பு நிறைந்திருக்கும் போது, மற்றவர்களோடு நியாயம் பேச முற்படுகின்றீர்களா? அந்த ஞானமுள்ள சாராதியானவன், தன் வாகன த்தை பழுது பார்க்கும் நிபுணர்களிடம் கொண்டு சென்றது போல, காலதாமதமில்லாமல் உங்கள் இருதயங்களை ஆராய்ந்தறிகின்ற, தேவ னுடைய சமுகத்திலே உங்களை அர்ப்பணியுங்கள். கோபம், கசப்பு, வன்மம் போன்ற சுபாவங்கள் உங்களை கட்டுப்படுத்த எத்தனிக்கும் போது, அப்படிப்பட்ட மாம்சத்தின் கிரியைகளை மேற்கொள்வதற்கு பரி சுத்த வேதாகமம் கூறும் ஆலோசனைளை வாசித்து தியானியுங்கள். மேற் கொள்ள முடியாதிருக்கும் பெலவீனங்களை ஜெபத்திலே தரித்திருந்து ஜெயம் கொள்ளுங்கள். இயந்திரங்களுக்கு குறித்த காலத்திலே எண் ணெயிட்டு எவ்வளவு கிரமமாக பராமரித்து வருகின்றீர்கள். உங்கள் வாக னம் பழுதடைந்த நிலையிலிருந்தால், பின்விளைவுகளை தவிரக்கும்படி அதில் உங்கள் பிள்ளைகள் ஏற்றிச் செல்ல மாட்டீர்கள். இயந்திரங்க ளைவிட எவ்வளவாய் விசேஷித்த ஆத்துமாவை குறித்து மிக அதிக கவனமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

**சங்கீதம் 112:1**

**கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கிய வான்.**

**ஜெபம்**: அன்பின் தேவனே, இந்த உலகத்தோடு அழிந்து போகும் வாழ்க்கையின் காரியங்களை மேன்மைபடுத்தாமல், நித்திய ஜீவனுக் குரியவைகளை மேன்மைப்படுத்தி வாழ பிரகாசமுள்ள மனக்கண் களை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்

# மனமாற்றமும் இடமாற்றமும்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த ஸ்திரியானவள், தன் வாலிப நாட்களிலே தவறான செயலொன்றில் ஈடுபடாக இருந்ததை அந்த ஊரார் அறிந்திருந்தார்கள். தற்போது அவள் திருமணமாகி தன் கணவரோடு சந்தோஷமாக வாழ்ந்து வந்தாள். அவள் தன் தவறான செயலை முற்றாக விட்டு மனந்திரும்பி அநேக ஆண்டுகள் கடந்து சென்றபோதும், ஊரார் அதைவிட்டுவிட மனதில்லாதிருந்தார்கள். அதனால், அவளுடைய கணவனார், தன் இளம் குடும்பத்தோடுகூட அந்த ஊரைவிட்டு வேறொரு ஊருக்கு சென்று அங்கே சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள். அந்த ஸ்திரியானவளோ, தான் வளர்ந்து வந்த ஊரையோ, சமுதாயத்தையோ குற்றப்படுத்தாமல், இவை யாவும் பல ஆண்டுகளுக்கு முன் தான் வாழ்ந்த கீழ்படியாமையின்வாழ்வினாலே உண் டான பின்விளைவுகள் என்று தன் மனதிலே ஏற்றுக் கொண்டவளாக இருந்தாள். அவள் தற்போது, பின்னானவைகளை மறந்தவளாய், முன் னான காரியங்களை நாடி, தான் சென்ற புதிய ஊரிலே, தன் குடும் பத்தை ஒழுங்காக கட்டுவதில் மிகவும் கவனமுள்ளவளாக வாழ்ந்து வந் தாள். மறுரூபமாகும்படி அழைக்கப்பட்ட சகோதர சகோதரிகளே, பொதுவாக மனிதர்கள் தங்கள் வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு மற்றவர்கள் தான் காரணம் என்று கூறிவிடுகின்றார்கள். அதனால், தங் கள் குடும்பத்தை, சமுதாயத்தை, ஊரை, சபையை விட்டு தூரம் சென்று விடுகின்றார்கள். தூரம் செல்வதினால் மனதிலிருக்கும் பிரச்சனைகள் தீர்ந்து விடுவதில்லை, மாறாக ஒருவன் தன் குற்றத்தை அறிக்கை பண்ணிவிட்டுவிடும் போதே அவன் வாழ்வடைவான் என்று சத்திய வேதம் அறிவுரை கூறுகின்றது. ஆனால் இன்று சில விசுவாசிகளும் தங்கள் பழைய வாழ்க்கையை உலகம் முற்றாக மறந்துவிட வேண்டும் என்று எதிர்பார்கின்றார்கள். வேறுசிலர்,அதிகாரத்தோடு கோரிக்கை (Demand) விடுகின்றார்கள். அதனால் இன்னுமதிகமாய் தங்களுக்கு தாங்களே நோவுகளை உண்டாக்கிவிடுகின்றார்கள். நீங்களோ அப்படியாக வாழாமல் நன்மையை கண்டடையும்படி இடத்தை மாற்றுவதற்கு முன்னதாக, சத்திய வேதம் கூறும் அறிவுரையின்படி உங்கள் மனதை மாற்றிக் கொள்ளுங்கள். அப்பொழுது இடமாற்றங்கள் உங்களுக்கு நற்பலனைத் தரும்.

**நீதிமொழிகள் 28:13**

**தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.**

**ஜெபம்:** வாழ்வு தரும் ஆலோசனைகளை தந்த தேவனே, உம்முடைய ஆலோசனைகளால் அடியேன் எச்சரிக்கப்படும் போது, நான் மனத்தாழ்மையோடு மனந்திரும்பி வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சமாதானத்தைக் காத்துக் கொள்ளுங்கள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த மனிதனானவன், தன் வீட்டையும், வீட்டை சுற்றியிருந்த நிலங்களையும் சுத்தப்படுத்தி, நன்றாக பராமரித்து வந் தான். அவன் தன் குடும்பத்தோடு விடுமுறைக்கு சென்ற போது, அந்த ஊரிலுள்ள சில வீணர்கள், இராத்திரி வேளையிலே, அவனுடைய வீட்டு முற்றத்திலே நாற்றமெடுக்கும் குப்பை கூலங்களை கொட்டிவிட்டார்கள். விடுமுறை நாட்கள் முடிந்து வீடு திரும்பிய போது, தன் வீட்டு முற்றத்தின் நிலையை கண்டபோது, அவன் அதிர்ச்சியடைந்தான். ஆனா லும், அவன் இது வீணர்களின் அநி யாயமானசெயல் என்று அறிந்து, தன் மனதை அதிகமாக குழப்பிக் கொள் ளாமல், முதலாவதாக தன் வீட்டு முற் றத்தை நன்றாக விளக்கி சுத்தப்படு த்தி, முன்பு இருந்த நிலைக்கு கொண்டு வந்தான். பிரியமானவர்களே, சில வேளைகளிலே சில விசுவாசிகளினுடைய வாழ்க்கையிலே உபத்தி ரவங்கள் சூழ்ந்து கொள்ளும் போது, "நான் என் சமாதானத்தை இழந்து விட்டேன்" என்றும், அந்த இழப்பிற்கு "அந்த சகோதரனே காரணம்" என் றும் கூறிவிடுகின்றார்கள். அதாவது, அந்த விசுவாசிகளுக்கு உண்டாயி ருந்த சமாதானத்தை அந்த சகோதரன் எடுத்துவிட்டு, சமாதானம் இருந்த இடத்தில் கசப்பு, பிரிவினை, வைராக்கியம் போன்றவற்றை வைப்பத ற்கு சில விசுவாசிகள் இடங் கொடுத்துவிடுகின்றார்கள். இந்த உல கிலே நம்மை சூழ இருக்கும் மனிதர்கள் எப்போதும் நீதியான கிரியை களையும், சமாதானத்திற்கு ஏதுவானவைகளையுமே செய்வார்கள் என்று ஆண்டவராகிய இயேசு கூறவில்லை. இந்த உலகத்திலே உபத்திர வங்கள் உண்டு. ஆனாலும் அந்த உபத்திரவங்களை உண்டு பண்ணுகி ன்றவர்கள் நம்முடைய சமாதானத்தை திருடிக் கொள்ளாதபடிக்கு, உபத்திரவங்களை மேற்கொள்ள வேண்டிய வழியை தம்முடைய வார் த்தையும் வழியாகவும், அந்த வார்த்தையை எப்படி கைகொள்வ தென் பதை தம்முடைய வாழ்க்கை வழியாகவும் நமக்கு காண்பித்துதிருக்கி ன்றார். எடுத்துக்காட்டாக, ஒருவன் உங்கள் குடும்பத்தைப்பற்றி காரணத் தோடேயோ, காரணமின்றியோ குறைவாக பேசும் போது, இந்த உலகத் தின் நீதியின்படி அதை மேற்கொள்ள நீங்கள் முயற்சி செய்யும் போது, நீங்கள் உங்கள் சமாதானத்தை இழந்துபோக இடம் கொடுக்கின்றவர் களாக இருப்பீர்கள். ஆனால், அந்த சூழ்நிலையிலே, நாம் நம்முடைய மாம்சத்திலே செயற்படாமல், தேவநீதி உங்களில் நிறைவேற நீங்கள் இடங் கொடுப்பீர்களாக இருந்தால், நீங்கள் உங்கள் சமாதானத்தை காத்துக் கொள்வீர்கள்.

**ரோமர் 12:21**

நீ தீமையினாலே வெல்ல ப்படாமல், தீமையை நன் மையினாலே வெல்லு.

**ஜெபம்**: உம்முடைய சமாதானத்தை எனக்கு தந்த தேவனே, நான் எல்லா சூழ்நிலைகளிலும் அந்த சமாதானத்தைக் காத்துக் கொள்ளும்படிக்கு உண ர்வுள்ளவனாக வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சொன்னதை செய்து முடிப்பார்!

எல்லா சூழ்நிலைகளிலும், நாம் கர்த்தரை நம்பி, அவருடைய வார்த்தையில் உறுதியாக நிலைநிற்கும்படி நம்மை நாம் தினமும் பயிற்சிவிக்க வேண்டும். அவரை நம்பி நாம் வாழும் போதும், சில வேளைகளிலே நாம் தவறி விழுந்துவிடும் நிலைமைகள் உண்டாகின்றது. நாம் மடங்கடிக்கப்பட்ட வேளைகளிளெல்லாம் கர்த்தர்தாமே நம்மை கைவிடவேமாட்டார். ஆனால் நாம் அவரை விட்டு விலகிவிடக் கூடாது. அவருடைய வார்த்தையில் உறுதியாக இருக்கின்றவர்கள், விழுந்த இடத்திலிருந்து எழுந்திருப்பார்கள். அதாவது, எந்த இடத்தில் அவர்கள் பாவம் செய்தார்களோ, அந்த இடத்திலே மனந்திரும்பி, தங்கள் குற்றங்களை ஏற்றுக் கொண்டு, அறிக்கை பண்ணி விட்டுவிடுகின்றார்கள். மற்றவர்களுக்கு மன்னிப்பு வழங்க வேண்டிய இடங்களிலே மன்னிப்பை வழங்கி, மற்றவர்களிடம் மன்னிப்பை கேட்டு பெற்றுக் கொள்ள வேண்டிய இடத்திலே மன்னிப்பை கேட்டு கொள் வார்கள். ஒரு சமயம் ஆண்டவராகிய இயேசு தம் சீஷர்களை நோக்கி: அக்கரைக்குப் போவோம் வாருங்கள் என்றார். அப்பொழுது, பலத்த சுழல்காற்று உண்டாகி, படவு நிரம்பத்தக்கதாக, அலைகள் அதின்மேல் மோதிற்று. கப்பலின் பின்னணியத்தில் அவர் தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார். அவர்கள் அவரை எழுப்பி: போதகரே, நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா என்றார்கள். அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப்பார்த்து: இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று. அவர் அவர்களை நோக்கி: ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று என்றார். அவர் அக்கரைக்கு போவோம் என்றால், நிச்சயமாக அவர் அக்கரைக்கு கொண்டு சேர்ப்பார். ஆனாலும் சீஷர்கள் அவருடைய வார்த்தையை விசுவாசிக்ககூடாமல், பயம் அவர்களை ஆட்கொண்டதால் சமாதானத்தை இழந்து போனார்கள். நான் உன்னை கைவிடுவதுமில்லை உன்னை விட்டு விலகுவதுமில்லை என்று கர்த்தர் கூறியிருக்கின்றார். வாக்குரைத்தவர் உண்மையுள்ளவர் எனவே இக்கட்டான சூழ்நிலையிலே மனம்பதறி அவிசுவாசத்திற்குரிய கிரியைகளை நடப்பிக் காமல், பயத்தை புறம்பே தள்ளி கர்த்தருடைய வார்த்தை நம்மில் நிறைவேற பொறுமையுடன் காத்திருக்க வேண்டும்.

**எபிரெயர் 13:5**

**நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே.**

**ஜெபம்**: வாக்குமாறாத தேவனே, என் பெலவீனங்களை அறிந்தவரே, இக்கட்டும் நெருக்கமும் என்னை சூழ்ந்து கொள்ளும் போது, உம்முடைய வார்த்தையிலே நிலைத்திருக்கும் இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உலகத்தின் தூண்டில்கள்

கடலோரத்தின் அருகே சில சிறுவர்கள், தூண்டில்களை வீசி மீன்களை பிடிப்பதற்காக அநேக நேரம் பொறுமையோடு காத்திருந்தார்கள். மீன்கள் ஒன்றேனும் அகப்படாததினால் அவர்கள் சோர்வடைந்து போனார்கள். அதைக் கண்ட சிறுவர்களின் தந்தையார் ஒருவர் அவர்களை அணுகி, எப்படிப்பட்ட இரைகள் மீன்களை கவரும் என்று அவர்களுக்கு அறிவுரை கூறி, சில இரைகளை அவர்களுக்கு கொடுத்தார். அவர்கள் அந்த இரைகளை தூண்டிலில் போட்ட போது, சில நிமிடங்களில் மீன்கள் அகப்பட்டதைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள். இதற்கொத்ததாகவே இந்த உலகத்தின் போக்கிற்கு விசுவாசிகளை இழுத்தெடுப்பதற்காக வீசப்படும் கவர்ச்சியான இரைகளை கொண்ட தூண்டில்களை குறித்து நாம் மிகவும் எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். இன்றைய உலகிலே சில கிறிஸ்தவர்கள் எப்படியும் வாழலாம் என்ற கருத்தையுடையவர்களாக தங்கள் மனதும் மாம்சமும் விரும்பியதை செய்தவதற்கு தங்களை ஒப்புக் கொடுக்கின்றார்கள். ஒவ்வொன்றிற்கும் ஒரு ஆரம்பம் இருப்பதைப் போல, வஞ்சனைக்கும் ஒரு ஆரம்பம் உண்டு. அதன் முதற்கட்டமாக, ஆகாதது என்று விலக்கிய காரியங்களை: கொஞ்சமாய் பார்த்தால் என்ன? மட்டாக அருந்தினால் என்ன? அள வோடு பழகினால் என்ன? கலலெறி தூர இடைவெளியில் ஐக்கியமாக இருந்தால் என்ன? என்ற கேள்வியோடு கொஞ்சம் கொஞ்சமாக ஆரம்பிக்கின்றார்கள். இது சில விசுவாசிகளின் சிந்தனையில் தோன்றும் கவர்ச்சிகள். கொஞ்சம் புளித்தமா பிசைந்தமா அனைத்தையும் உப்பப்பண்ணுவது போல, நாளடைவிலே விலக்கப்பட்ட காரியத்திற்குள் தன்னை சிக்கிக் கொள்கின்றான். பின்னர் நாங்கள் நன்றாகத் தான் இருக்கின்றேன், நீங்கள் சற்று இந்தப் பக்கம் வந்து பாருங்கள் என்று மற்றவர்களையும் அழைக்கின்றார்கள். இப்படியாக விலக்கப்பட்ட காரியங்களை ஏற்றுக் கொள்ளும் கூட்டம் பெருகும் போது, அந்தக் கூட்டத்தார் உணர்வற்றுப் போய்விடுவதால், விலக்கப்பட்ட காரியங்களை ஏற்றுக் கொள்ளாமல் வேறு பிரிந்த வாழ்க்கை வாழ்வோரை பார்த்து "இவர்கள் பைத்தியக்காரர், புறம்போக்கானவர்கள்" என்று பரியாசம் செய்கின்றார்கள். பாவத்திற்கு வழிநடத்தும் உலக காரியங்களை குறித்து எப்போதும் நாம் மிகவும் எச்சரிக்கையுள்ளவர்களாக வாழ வேண்டும். ஆரம்பத்திலே அவை நன்மையானது போல காட்சியளிக்கும். நாளடை வில் இருதயத்தை உணர்வற்றதாக மாற்றிவிடும்.

**மத்தேயு 10:16**

ஆகையால், சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்.

**ஜெபம்**: பரிசுத்த வாழ்விற்கு வேறுபிரித்த தேவனே, எல்லாவற்றையும் உம்முடைய வார்த்தையின் வெளிச்சத்தில் ஆராய்ந்து பார்த்து நலமானதை பற்றிக் கொள்ள எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கி றேன் ஆமென்.

# வழுவிப்போக வைக்கும் வழிகள்

ஆதியிலே ஏவாளானவள், தேவனாகிய கர்த்தர் செய்யக்கூடாது என்று விலக்கி வைத்த காரியத்தைக் குறித்து, சர்ப்பத்தோடு சம்பாஷணை செய்தாள். அதனால், தேவனானவர் பொல்லாப்பு வரும் என்று விலக்கி வைத்த நன்மை தீமை அறியும் மரத்தின் கனியானது அவளுடைய மனதை கவர்ந்து கொண்டது. சம்பாஷணையின் முடிவிலே அவள் வஞ்சிக்கப்பட்டு போனாள். இன்றைய நாட்களிலே இந்த உலகத்தின் போக்கு, அதன் கொள்கைகள், தத்துவங்களை, அதன் நடை, உடை, பாவனையை மனிதர்கள் மனதிலே விதைப்பதற்கு ஊடகமாக பயன்படுத்தப்படும் காரியங்கள் எது என்பதை நீங்கள் ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும். திரைப்படங்கள் அவைகளில் முக்கியமானதொன்றாக திகழ்ந்து வருகின்றது. மனிதர்களின் மனத்தை குறிப்பிட்ட நேரத்திற்கு முழுமையாக கவர்ந்து கொள்ளும், கதை வசனங்கள், தத்துவ பாடல்கள், காட்சிகளோடு காணப்படுகின்றது. அவைகளை உருவாக்கின்றவர்கள் யார்? அவர்கள் நித்திய ஜீவனை நோக்கி செல்கின்றார்களா? அவர்களின் நோக்கம் என்ன? மனிதர்கள் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்ற இலக்கையுடையவர்களா? மேலானவைகளை தேடும்படி அழைப்பை பெற்ற சகோதர சகோதரிகளே, சிந்தியுங்கள்! வேத வார்த்தையின் வெளிச்சதில் உங்களது வழிகளை ஆராய்ந்து பாருங்கள். மீன்களை கவரும் இரைகளைப் போல, மனிதர்களின் மனதை கவரும் காரியங்களின் முடிவு என்ன என்பதை நிதானித்து அறிந்து கொள்ளுங்கள். உங்கள் சுத்த மனசாட்சி சூடுண்டு, உணர்வற்று, கடினப்பட்டுப் போகாதபடிக்கு யாக்கிரதையுள்ளவர்களாக இருங்கள். உலகமும், மாம்சமும் பிசாசானவனுக்கு அடியில் இருக்கின்றது. "நான் தான் பிசாசு, நான் மனிதர்களின் கண்களை குருடாக்கின்றவன், தேவ பிள்ளைகளை வஞ்சிக்கின்றவன்" என்ற பெயர் பலகையோடு அவன் உங்களிடம் வருவதில்லை. மனிதர்களின் கண்களுக்கு நன்மையாக தோன்றும் வழிகளை காண்பித்தவனாகவே உங்களிடம் வருவான். நீங்கள் உங்கள் இதயக் கதவை சிறிதாக அவனுக்கு திறந்து, அவனுடைய தீமையான விதைகளை விதைப்பதற்கு இடம் கொடுக்க வேண்டும் என்பதே அவனுடைய நோக்கமாக இருக்கின்றது. அந்த தீய விதைகள் வளர்ந்து கசப்புள்ள மாம்சத்தின் கிரியைகளை வெளியரங்கமாக பிறப்பிக்கும். எனவே இந்த உலகத்திற்குள் உங்களை இழுத்துக் கொள்ளக்கூடியதும் மனித கண்களுக்கு நன்மையாக தோன்றுபவைகளைக் குறித்து விழிப்புள்ளவர்களாக இருங்கள்.

**கொலோசெயர் 3:2**

**பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, மனிதர்களுக்கு செம்மையாக தோன்றும் வழிகளிலே நான் நடவாமல், உம்முடைய ஜீவ பாதையிலே பொறுமை யோடு ஓடத்தக்கதாக பிரகாசமுள்ள மனக் கண்களைத் தந்து என்னை நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மனத்துயரம் உண்டாகும் போது...

இழப்புக்கள் மனதில் துக்கத்தை உண்டுபண்ணும். மனிதர்கள் நம்மை எதிர்த்து, ஏளனம் செய்யும் போது, அதனால் உண்டாகும் ஏமாற்றமும், அவமானமும், நிந்தையும் மனவேதனைக்குரியவைகள். தகாத வார்த்தைப் பிரயோகங்களினாலே மனதிலே காயங்கள் உண்டாகிவிடுகின்றது. சவுக்கடிகளாலே சரீத்திலே உண்டாகும் காயங்கள் நோவுகளை உண்டு பண்ணும். இந்த உணர்வுகளுக்கும் அனுபவங்களுக்கும் எந்த மனிதனும் விதிவிலக்கானவனல்ல. ஆனால் இத்தகைய போராட்டம் நிறைந்த சூழ்நிலைகளின் மத்தியிலே ஒரு மனிதனானவன் எப்படியாக நடந்து கொள்கின்றான் என்பதை மையாகமாக வைத்து அவன் கிறிஸ்துவின் சாயலை தரித்தவனாக வாழ்க்கின்றானா அல்லது மனதிலே தோன்னும் மாம்சத்தின் உந்துதலுக்கு இடம் கொடுத்து உலகபோக்கில் வாழ்க்கின்றானா என்பதை அவன் தன்னைத்தானே நிதானித்து அறிந்து கொள்ளமுடியம். ஆதியிலே மனிதனானவன் கீழ்ப்படியாமையினாலே தேவசாயலை இழந்து போனான். அதனால் அவன் நித்திய மரணத்தை சம்பாத்தித்துக் கொண்டான். தேவ சாயலை இழந்து போனதினாலே உலகத்திலே பாவம் உண்டாகியது. அந்த பாவத்தின் விளைவுகளினாலே, தன் சகோதரனை கொன்று போட்ட காயீனைப் போல, மனிதர்கள் மனிதர்களை எதிர்த்து, ஏமாற்றி, ஏளனம் செய்து, துன்மார்க்கமான மாம்சத்தின் கிரியைகளை ஒருவருக்கெதிராக ஒருவர் நடப்பிக்கின்றார்கள். கிறிஸ்துவின் சாயலில் வளர்கின்ற விசுவாசியானவனோ, பாடுகள், அவமானங்கள், நிந்தைகள் வாழ்வை சூழ்ந்து கொள்ளும் போது, ஆண்டவராகிய இயேசு எப்படியாக அவற்றை பிதாவானவருடைய சித்தப்படி ஜெயம் கொண்டாரோ, அப்படியே அவனும் ஜெயம் கொள்கின்றான். நம்முடைய ஆண்டவராகிய இயேசுதாமே, தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள். (எபிரெயர் 12:2-3). பரலோக தேவனால் அழைப்பட்ட நீங்கள் பரலோகத்திற்குரியவர்களாக நடந்து கொள்ளுங்கள்.

**எபிரெயர் 12:3**

**தமக்குவிரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்**

**ஜெபம்**: உன்னதமான தேவனே, துன்பங்கள் துக்கங்கள் சூழ்ந்து கொள்ளும்போது, இந்த உலகத்திற்கு ஒத்தவேஷம் தரியாமல் உம்முடைய திருக்குமாரனாகிய இயேசுவின் சாயலிலே வளர்ந்து பெருகும்படி கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சமாதானத்தின் காரணம் என்ன?

ஒரு விசுவாசியானவன் கர்த்தர் தன்னை எவ்வளவு திரளான ஆஸ்திகளால் ஆசீர்வதித்திருக்கின்றார் என்பதைக் குறித்தும், தனக்கு கிடைத்த மனச்சாமாதானத்தைக் குறித்தும் பலமுறை சபை மத்தியிலே சாட்சி பகர்ந்து கொண்டான். சில ஆண்டுகளுக்கு பின்னர் அந்த ஊரை தாக்கிய கடும் புயலினாலே, அவன் வசித்து வந்த வீடும், முதலீடு செய்திருந்த வியாபார ஸ்தலங்களும் அழிந்து போய்விட்டது. தனக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்புக்களை சகித்துக் கொள்ளக் கூடாமல், தன் மனவேதனையிலே அவிசுவாசத்திற்குரிய வார்த்தைகளை பலர் முன்னிலையிலே அறிக்கையிட்டான். என் சமாதானத்தை நான் இழந்து போனேன் என்று கண்ணீர்விட்டு அழுதான். துக்க முகத்தோடு தன் நாட்களை கழித்து வந்தான். இந்த விசுவாசியானவனுடைய சமாதானம் எதினால் அவனுக்கு உண்டாயிருந்தது? அவன் கொண்டிருந்த சமாதானம் அவனிடம் இருந்த பொருட்களால் உண்டாயிருந்தால், அந்தப் பொருட்களை அவன் இழந்துபோன போது, அவன் தன் சமாதானத்தையும்இழந்து போனான். பிரியமான சகோதர சகோதரிகளே, உங்களுடையசமாதானம்எதினால் உண்டாயிருக்கின்றது? உங்கள் அங்கத்தவர்களினாலோ? கல்வி, செல்வம், அந்தஸ்துகளினாலோ? நாட் டின் பொருளாதாரத்தினாலோ? நண்பர்கள் உறவினர்களினாலோ? சபைப் போதகரினாலோ? சகவிசுவாசிகளினாலோ? அல்லது மெய்யான சமாதானத்தை தரும் ஆண்டவர் இயேசுவினாலோ? இன்றைய நாளிலே உங்களைநீங்களே ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள். உங்கள் மனதை குழப்பும் காரணிகள் என்ன? அவிசுவாசத்தின் வார்த்தைகளை பேச தூண்டும் சம்பவங்கள் என்ன? அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவா ர்கள். (2 தீமோ 3:12). ஆனாலும் அவர்கள் சமாதானக் காரணராகிய இயேசுவுக்கு பிரியமுள்ளவர்களாக வாழ்வதினாலே, தேவ சமாதா னத்தை இழந்து போகமாட்டார்கள். நம்மோடு வாசம் செய்யும் சமாதானப் பிரபுவாகிய கர்த்தரை எம்மிடமிருந்து யார் பறித்துக் கொள்ளமுடியும்? ஒருவராலும் கூடாது. ஆம், தேவ தாசர்கள் அறிக்கை செய்தது போல "நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை. கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை. துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை கீழே தள்ளப்பட்டும் மடிந்துபோகிறதில்லை." ஏனெனில் நம்மோடு இருப்பவர் மிகவும் பெரியவராயிருக்கின்றாரரே.

**2 கொரிந்தியர் 4:8**

**நாங்கள்எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை;**

**ஜெபம்**: நித்திய சமாதானத்திற்கென்று என்னை அழைத்த தேவனே, மெய்யான சமாதானத்தின் காரணராகிய இயேசுவே என் மனச்சமாதானத்தின் காரணராக எப்போதும் இருந்து, எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவ ஆசீர்வாதங்கள்!

ஒரு பிள்ளையானவன், தன் பெற்றோர் தன்னை அரவணைத்து தேற்றும் போதும்,பண்டிகை நாட்களிலே பரிசுப்பொருட்களை அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் போதும், தன் பெற்றோரை குறித்து நல்லுணர்வுள் ளவனாகவும், அவர்கள் தன்மேல் அன்பு கூறுகின்றார்கள் என்பதையும் குறித்து தன் நண்பர்களுக்கு கூறிக்கொள்வான். ஆனால், சில வேளைகளிலே அவனை நெறிப்படுத்தும்படி கண்டித்து, தண்டிக்கும்போது, தன் பெற் றோர் ஏன் தன்னை இப்படி யாக துன்பப்படுத்துகின்றார்கள் என்று தன்னுள்ளே நொந்து கொள் வான். அதாவது, தன் அறிவுக்கெட்டியபடி தான் விரும்பியவைகளை பெற்றோர் கொடுக்கும் போதும், தன் மனதிற்கேற்றவைகளை செய்வத ற்கு பெற்றோர் அனு மதிக்கும் போதும், அது அவனுக்கு ஆசீர்வாத மாகவும், பெற்றோர் அவன் எதிர் காலத்தைக் குறித்த நல்லெண்ண த்துடன், அவனை நெறிப்படுத்தும் போது, அவன் அதை தனக்கு இட றலாக எண்ணிக் கொள்கின்றான். அப்பா பிதாவே என்று அழைக்கும் புத்திர சுவீகாரத்தின் ஆவியை பெற்ற அருமையான சகோதர சகோதரி களே, தேவனாகிய கர்த்தருடைய வார்த்தை சம்பூரணமானது என்பதை யும், அந்த வார்த்தைக்குள் அருமையான ஆசீர்வாதங்கள் அடங்கியி ருக்கின்றது என்பதையும் நீங்கள் அறிந்து, அறிக்கை செய்தும், அனுப வித்து வருகின்றீர்கள். நம்முடைய பிதாவாகிய தேவன்தாமே தம்மு டைய பிள்ளைகள் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளும்படி, அவர்கள் வாழ்வில் தடையாக இருப்பவைகளை அவர்களைவிட்டு அகற்றும்படி க்கு, அவர்களை நெறிப்படுத்துவதை ஆசீர்வாதம் என்று கூறுவீர்களா அல்லது இடறல் என்று கூறுவீர்களா? கர்த்தரைத் தெய்வமாகக் கொண் டிருக்கிற ஜனம் பாக்கியமுள்ளது என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின் றது. நாம் நித்திய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளும்படிக்கு, இந்த உலகிலே இருக்கும் அநித்தியமானவைகளையும், அழிவுக்குரியவைக ளையும் நம்மை பற்றிக் கொள்ளாதபடிக்கு நம்மை காத்து வழிநடத்து கின்றார். அவருடைய வார்த்தையின்படி அவர் காட்டும் வழியிலே நாம் நடந்து செல்லும் போது, நம் வாழ்க்கைக்கு அவசியமற்ற சில கதவுளை திறக்கக்கூடா தபடி அடைத்து விடுகின்றார். ஆனால், பரலோகத்தின் திறந்த வாசலை ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்கு தம்முடையவர்களு க்காக திறந்து வைத்திருக்கின்றார். இவ்விதமான சீரைப்பெற்றவர்க ளாகிய நாம் பாக்கியம் பெற்றவர்களே.

**சங்கீதம் 144:15**

**கர்த்தரைத் தெய்வமாகக் கொண் டிருக்கிற ஜனம்பாக்கியமுள்ளது.**

**ஜெபம்**: என் பிதாவாகிய தேவனே, நான் உம்முடைய திவ்விய வழிநட த்துதலைக் குறித்து நொந்து கொள்ளாமலும், சோர்வடையாமலும் இருக்க எனக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து வழிநடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# என்னை காக்கும் கேடகம்

கர்த்தர் என் தயாபரரும், என் கோட்டையும், என் உயர்ந்த அடைக்கலமும், என்னை விடுவிக்கிறவரும், என் கேடகமும், நான் நம்பினவருமாகயிருக்கின்றார் என்று தேவ பக்தனாகிய தாவீது ராஜா தன் சங்கீதங்களிலே பாடியிருக்கின்றார். இத்தகைய வாக்குதத்தங்களை விசுவாசியானவர்கள் அறிக்கை பண்ணி பாடுவதில் மிகவும் விருப்பமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். ஆனால், சிலவேளைகளிலே தேவனுடைய வாக்குத்தத்தங்களுககுள் அடங்கியிருக்கும் நன்மையான ஆசீர்வாதங்களை குறித்து அறிவில்லாதவர்களாக வாழ்ந்துவிடுகின்றார்கள். ஒரு பராக்கிரமசாலியின் வீட்டிற்குள் நாம் தஞ்சம் புகுந்தால், யார் நம்மை மேற்கொள்ள முடியும்? அந்த பராக்கிரமசாலியின் வீடு நம்முடைய கோட்டையாகஇருந்தால், யார் நம்மை எதிர்த்து உள்ளே வரமுடியும்? அந்த பராக்கிரமசாலி நம் கேடகமாக இருந்தால், யார் நம்மை நோக்கி அக்கினியாஸ்திரங்களை எய்ய முடியும்? சற்று சிந்தனை செய்து பாருங்கள். நம்முடைய எதிரியாகிய பிசாசானவன் நம்மை வஞ்சிக்கும்படி, தந்திரமான வார்த்தைகளை பேசி, நம் கண்களை கவர்ந்து கொள்ளும் செயல்களை செய்கின்றவனாக இருக்கின்றான். சில வேளைகளிலே சில விசுவாசிகள் அந்த வஞ்சகனின் செயல்களை ஆசீர்வாதம் என்று எண்ணிக் கொள்வதால், அவைகளை பெற்றுக் கொள்ளும்படி தங்கள் வாழ்க்கையை சமரசம் செய்ய எண்ணமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். ஆனால், சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் நம்முடைய தயாபரரும் உயர்ந்த அடைக்கலமுமாக இருப்பதால், நாம் நம் கண்போன போக்கில் சென்று, வஞ்சகனின் கண்ணிக்குள் சிக்கிக் கொள்ளாதபடிக்கு, நம்மை தடுத்து நிறுத்தி காத்துக் கொள்கின்றார். நம் கண்கள் தெளிவடையும்படிக்கும், நம் இருதயம் உணர்வடையும்படிக்கும் சில காரியங்களை நம் வாழ்விலே அனுமதிக்கின்றார். எனவே நான் நம்பினவர் நீர் என்று சகலமும் அறிந்த தேவனாகிய கர்த்தரை நோக்கி நீங்கள் அறிக்கை செய்பவர்களாக இருந்தால், அந்த நம்பிக்கையின்படி, அவர் ஏற்ற காலத்தில் தாம் முன்குறித்தவைகளை நிறைவேற்றி முடிக்கும்படிக்கு, அவருடைய பலத்த கரத்திற்குள் பொறுமையுடன் அடங்கியிருங்கள்.

**சங்கீதம் 144:2**

**அவர் என் தயாபரரும், என் கோட்டையும், என் உயர்ந்த அடைக்கலமும், என்னை விடுவிக்கிறவரும்,என் கேடகமும், நான் நம்பினவரும், என் ஜனங்களை எனக்குக் கீழ்ப்படுத்துகிறவருமாயிருக்கிறார்.**

**ஜெபம்**: என்னைக் காக்கும் கேடகமாகிய தேவனே, உம்முடைய ஆசீர்வாதங்களுக்குள் அடங்கியிருக்கும் மேன்மையான காரியங்களை நான் அறிந்து கொள்ளும்படிக் என் மனக்கண்களை திறந்தரு ள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# "கிருபையின் காலம்"

கொள்ளை நோயானது உலகத்தை கலகங்கப் பண்ணிக்கொண்டிருந்த நாட்களானது முடிவடையும் போது, குறிப்பிட்ட பட்டணத்திலுள்ள பல மக்களில் பலருடைய சாரதி அனுமதிப் பத்திரம் காலவதியாகிவிட்டதால், யாவரும் அதை புதுபிக்க வேண்டியதாக இருந்தது. அதனால், அந்த நாட்டின் அரச அதிபர்கள், சாரதி அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கு அநேக மாதங்கள் கூட்டிக் கொடுத்தார்கள். அந்தகாலவறை யறை முடிவடையும் தறுவாயில், இன்னும் பலர் தங்கள் சாரதி அனுமதிப்பத்திரங்களை பல காரணங்களுக்காக புதுப்பிக்காமல் இருந்ததால், அவர்களின் காரணங்களை கேட்டு அவர்களுக்கு அபராதம் எதையும் விதிக்காமல், பாரபட்சமில்லாமல் யாவருக்கும் "கிருபை காலம்" (Grace Period) என்று இன்னும் சில மாதங்களை கூட்டிக் கொடுத்தார்கள். அந்த காலம் முடிவடைந்த பின்னர், பொலிஸ் அதிகாரிகள், சாராதி அனுமதிப் பத்திரங்களை புதுப்பிக்காத மனிதர்களை இடைமறித்து, அவர்களுக்கு அபராதத்தை வழங்கினார்கள். பிரியமானவர்களே, இந்த பூமியிலே எல்லா காலங்களுக்கும் ஒரு முடிவு உண்டு. நாம் இப்போதுகிருபையின் காலத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். உன்னை அழைத்த தேவனாகிய கர்த்தர் உண்மையுள்ளவர். அவர் வாக்குமாறாதவர்! அவர் உன்னை பாதி வழியில் கைவிடமாட்டார். அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள். அவர் உனக்கென்று ஆயத்தப்படுத்தியிருக்கும் தம்முடைய நித்திய வீட்டிற்கு நீ வந்தடைய வேண்டும் என்று அவர் உன்மேல் நீடிய பொறுமையுள்ளவராக இருக்கின்றார் என்பதைக் குறித்து நீ உணர்ந்தவனாக வாழ வேண்டும். இன்றைய நாட்களிலே சில விசுவாசக்கூட்டத்தார் கிருபையின் நாட்களை தேவ சாயலிலே வளர்வதற்கு பிரயோஜனப்படுத்திக் கொள்வதற்கு பதிலாக, தேவ கிருபையை குறித்து விவாதிப்பதிலும், தங்கள் வழிகளை நியாயப்படுத்துவதிலும் அதிக நேரங்களை விரயப்படுத்திக் கொள்கின்றார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, சற்று உங்கள் வாழ்க்கையை தேவ வார்த்தையின் வெளிச்சத்திலே நீங்களே ஆராய்ந்து பாருங்கள். "நான் போதிக்கப்படகூடியவனாக இருக்கின்றேனா? என்னுடைய செவிகள் தேவ வார்த்தை கேட்பதற்கு திறந்திருக்கின்றதா? என்னுடைய இருதயம் தேவனுடைய கடிந்து கொள்ளுதலுக்கு உணர்வுள்ளதாக இரு க்கின்றதா?" போன்ற கேள்விகளை நீங்களே உங்களிடம் கேட்டு, ஆரா ய்ந்தறி தந்து வேதனையுண்டாக்கும் வழிகளை விட்டு கர்த்தரிடத்தில் திரும்புங்கள்.

**புலம்பல் 3:40**

**நாம் நம்முடைய வழிகளைச் சோதித்து ஆராய்ந்து, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவோம்.**

**ஜெபம்:** நல் ஆலோசனைகள் தரும் பரம தகப்பனே, உம்முடைய ஆலோசனைகளை நான் அசட்டை பண்ணாமல், நீர் காட்டும் நேரிய வழியிலே செல்ல எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கர்த்தருடைய வழிகள்

பொருளாதார நெருக்கடியான நாட்களிலும், நீதியான முறையிலே உழைத்து, தன் பிள்ளைகளை வளர்ந்து வந்த தகப்பனானவர், குறித்த காலத்திலே தன்னிடமிருந்த சொத்துக்களை பிரித்து தன் மகனுக்கும் மகளுக்கும் கொடுத்திருந்தார். அவருடைய மகனானவன், அந்த சொத்துக்களின் பாதியை பணமாக்கி, பங்கு சந்தையிலே பெரும் முதலீடு செய்தான். அதை அறிந்த அவனுடைய தகப்பனானவர், மகனே, அகலக்கால் வைக்காதே, ஒரு இரவிலே செல்வத்தை திரட்ட வேண்டும் என்ற மனம் உனக்கு வேண்டாம் என்று அறிவுரை கூறியிருந்தார். அதற்கு மகனானவன் தன் தகப்பனானவரை நோக்கி: அப்பா, நான் பொருளாதார முகாமைத்துவைத்தை குறித்து நன்றாக கற்றிருக்கின்றேன், எனவே கவலைப்படாதிருங்கள் என்று பதிலளித்தான். இரண்டு வருடங்களுக்குள், பங்கு சந்தை விழ்ச்சி கண்டதினால், அவன் மிகுந்த நஷ்டமடைந்தான். அதை ஈடு செய்யும்படிக்கு, தன் மற்றய பாதி சொத்தை ஈடாக வைத்து, வங்கியிலே பெரும் கடனுதிவியை பெற்றுக் கொண்டான். ஒரு வழியில் லையென்றால், மறுவழி உண்டு என்று தன் தகப்பனானவருக்கு அறி வுரை கூறினான். சில வருடங்கள் சென்றபின்பு, அவன் வங்கிக்கடனு தவியின் வட்டியை செலுத்த முடியாமல், அவனுடைய சொத்தை இழந்து போகும் தறுவாயில், தன் நண்பர்களிடமிருந்து அதிக வட்டிக்கு பெருந்தொகையான பணத்தை பெற்றுக் கொண்டான். அபாய நேர்வுகள் இல்லாமல் அதிக பலனை கண்டடைய முடியாது, (No Risk No Return) எல்லா சூழ்நிலைகளையும் சமாளிக்க பழகிக் கொள்ள வேண்டும் என்று கூறி, நண்பர்கள், உறவுகள், வியாபார ஸ்தாபனங்கள் மத்தியில் தன் நன்மதிப்பை இழந்து, எழுந்திருக்க முடியாத பொருளாதார வீழ்ச்சியை காணும் வரை, தன் தகப்பனானவரின் அறிவுரையை அசட்டை பண்ணி, அவன் தன் வாழ்க்கையை சமாளிக்க முயற்சி செய்தான். மேலானவைகளை தேடும்படிக்கு, உன்னதமானவருடைய அழைப்பை பெற்ற பிரியமான சகோதர சகோதரிகளே, கர்த்தருடைய வழிகளிலே "சூழ்நிலைகளை சமாளித்தல்" என்ற பதத்திற்கு இடமேயில்லை. அவருடைய வழிகள் செம்மையானவைகள். ஞானமுள்ளவர்கள் அதைக் கண்டடைகின்றார்கள். கர்த்தருக்கு பயந்து அவர் வழியிலே நடக்கின்றவர்களிடத்திலே அந்த ஞானம் தங்கும். அவருடைய வழியிலே நடக்கின்ற உத்தம மார்க்கத்தார் மனநிறைவுடனான சமாதானத்தை தங்கள் வாழ்க்கையிலே கண்டடைகின்றார்கள்.

**சங்கீதம் 128:1**

**கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்.**

**ஜெபம்**: செம்மையான வழியிலே என்னை நடத்தும் தேவனே, வாழ்வு தரும் உம்முடைய திருவார்த்தைகளை நான் தியானித்து அந்த வார்த்தைகளின் வழியிலே நான் வாழ எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# குறுக்கு வழிகள்...

ஒரு தகப்பனானவர், தன் மகனானவனை கூப்பிட்டு, ஊரிலுள்ள சந்தைக்கு சென்று சில பொருட்களை வாங்கி வருமாறு அவனிடம் கூறினார். மகனானவன் சந்தைக்கு செல்ல ஆயத்தமாகும் போது, அவன் தகப்பனானவர் அவனை நோக்கி: இந்நாட்களிலே, நீ வயல்வெளிப் பக்கமாக இருக்கும் குறுக்கு பாதையிலே செல்லாமல், சந்தைக்கு நாம் செல்லும் வழமையான வீதி வழியாக செல்ல வேண்டும் என்று அவனுக்கு திட்டமாக அறிவுரை கூறியிருந்தார். அவனோ, அப்பா எப்பொழுதும், காரியங்களைக் குறித்து எண்ண வேண்டியதிற்கு அதிகமாக யோசிப்பவர், நான்வயல்வெளியிலுள்ள ஒற்றையடிப் பாதை வழியாக சீக்கிரமாக சென்று வருவேன் என்று குறுக்கு வழியாக புறப்பட்டான். சற்று தூரம் சென்ற பின்பு, அந்த வழியிலே வன விலங்குகளினால், சில மனிதர்கள் தாக்கபட்டதினால், அந்த ஒற்றையடிப்பாதை தற்காலிகமாக அடைக்கப்பட்டிருப்தை கண்டான். இவ்வளவு தூரம் வந்துவிட்டேன் என்று திரும்பவும் வழமையாக செல்லும் வழிக்கு செல்வது அதிகநேரமெடுக்கும் என்று, வயல் வழியாக செல்வோம் என்று தீர்மானித்து அதனூடாக சென்று கொண்டிருந்தான், இன்னும் சற்று தூரம் அவ்வழியாக அவன் சென்றபின்பு, கடந்த கிழமை அந்த ஊரைத்தாக்கிய சூறாவளியினாலே, வயல்வெளியின் மற்றய பக்கத்தில் கடக்கக்கூடாதபடிக்கு பெருவெள்ளம் இருப்பதைக் கண்டு கொண்டான். அவன் மனம் அவனை திரும்பிப்போ என்று உறுத்திய போதும், அவன் திரும்பிப் போகாமல், அவன் சற்று தரித்து நின்று வேறு ஏதாவது குறுக்கு வழி இருக்கின்றதா என்று பார்த்தான். நித்திய ஜீவனுக்கென்று அழைப்பை பெற்ற பிரியமான சகோதர சகோதரிகளே, இன்றைய நாட்களிலே சில விசுவாசிகளுடைய வாழ்க்கையும் இவ்வண்ணமாகவே போய் விடுகின்றது. தேவனுடையசத்திய வார்த்தைகள்உபதேசிக்கப்படும் போது, மேய்ப்பரானவர் கூறுவதைப் போல வாழ்ந்தால், இந்த நவீன உலகத்திலேவாழமுடியாதுஎன்று தங்களுக்குள்ளே தீர்மானம் செய்து கொண்டு, இந்த உலகத்திலுள்ள குறுக்கு வழிகளை நாடிச் செல்கின்றார்கள். அந்த வழியிலே பிரச்சனைகள்வந்தாலும், தங்கள் தவறுகளை ஏற்றுக் கொண்டு, நேரிய வழிக்கு திரும்பாதபடிக்கு தங்கள் இருதயத்தை கடினப்படுத்திக் கொள்கின்றார்கள். உன் கண்கள் நேராய் நோக்கக்கடவது. உன் கால்நடையைச் சீர்தூக்கிப்பார் உன் வழிகளெல்லாம் நிலைவரப்பட்டிருப்பதாக. வலதுபுறமாவது இடதுபுறமாவது சாயாதே. உன் காலைத் தீமைக்கு விலக்குவாயாக.

**நீதிமொழிகள் 4:26**

**உன் கால்நடையைச் சீர்தூக்கிப்பார்; உன் வழிகளெல்லாம் நிலைவரப்பட்டிருப்பதாக.**

**ஜெபம்:** நல் ஆலோசனைகள் தரும் பரம தகப்பனே, உம்முடைய ஆலோசனைகளை நான் அசட்டை பண்ணாமல், நீர் காட்டும் நேரிய வழியிலே செல்ல எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கர்த்தருடைய சத்தம்

நெடுஞ்சாலையிலே தன் நவீன மோட்டார் வண்டியை வேகமாக ஓட்டிச் சென்ற கொண்டிருந்த மனிதனானவன், சாலையிலே போடப்பட்டிருந்த வேகத்தின் அளவின் அடையாள குறிப்பீட்டை கண்டிருந்தும் வேகத்தை தணிக்காமல் வண்டியை ஓட்டிச்சென்று கொண்டிருந்தான். அவனுடைய வண்டியிலே பொருத்தப்பட்டிருந்த நவீன கருவியும், வண்டியானது அதி வேகமாக செல்கின்றது என்ற எச்சரிப்பு சத்தத்தை தொனித்தது. அதையும் பொருட்படுத்தாமல், அவன் அதி வேகமாகவே வண்டியை ஓட்டி, அன்று சேதமில்லாமல் வீடு வந்து சேர்ந்தான். நாளடைவிலே சாலை விதிகளையும், எச்சரிப்புப் தொனியையும் பொருட்படுத்தாமல், வண்டியை ஓட்டி செல்வது அவனுக்கு பழக்கமும் வழக்கமாயிற்று. இது ஒழுங்குமுறைகளை யும், சட்டதிட்டங்களையும், எச்சரிப்பு தொனிகளையும் பொருட்படுத்தாத உணர்வற்ற நிலையாகும். ஒருநாள் அவன் தான் சந்திக்கப்போகும் பாதகமான சேதத்தை குறித்து உணர்வற்றவனாகவே வாழ்ந்து வந்தான். பிரியமான சகோதர சகோதரிகளே, தேவனாகிய கர்த்தர்தாமே நாம் நடக்க வேண்டிய வழிகளை நமக்கு தம்முடைய வார்த்தைகள் வழியாக காண்பித்து வருகின்றார். அந்த ஜீவ வார்த்தைகளை உபதேசிப்பதற்கு தம்முடைய தாசர்களை நியமித்திருக்கின்றார். கோணலும் மாறுபாடுமான இந்த உலகத்திலே வேறு பிரிக்கப்பட்ட வாழ்க்கை வாழும்படியாக ஒழுங்கு முறைகளை நமக்கு கொடுத்திருக்கின்றார். அவருடைய வார்த்தை நம்மை தேற்றுகின்றது, அருமையான ஆலோசனைகளை தருகின்றது, தீங்கிலே விழுந்து போகாதபடிக்கு எச்சரிப்பின் சத்தத்தை தொனிக்கின்றது. கீழ்படியாமையிலே நாம் நடக்கும் போது, அவருடைய திவ்விய வார்த்தைகள் நம்மை கண்டித்து, தண்டித்து, சீர்திருத்தி, நடத்துகின்றது. தன் வாகனத்தை உணர்வற்றவனாக ஓட்டிய அந்த மனிதனானவனைப் போல நாம் ஒழுங்கு முறைகளை அசட்டை செய்யாமல், உணர்வுள்ளவர்களாக, நம்முடைய நல்ல மேய்ப்பனாகிய ஆண்டவர் இயேசுவின் சத்தத்தை கேட்டு அவரின் பின் செல்கின்றவர்களாக நாம் வாழ வேண்டும். எல்லா வேளைகளிலும் கர்த்தருடைய வசனம் உங்கள் சிந்தையை ஆட்கொண்டிருப்பதாக. காலத்திலே நற்கனிகளை அறுவடை செய்யும்படிக்கு, சத்திய வேதத்தை தியானியுங்கள், அதன்படி உங்கள் வாழக்கயை அமைத்துக் கொள்ளுங்கள்.

**சங்கீதம் 1:2**

**கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.**

**ஜெபம்**: என்மேல் உம் கண்ணை வைத்து ஆலோசனை தரும் தேவனே, நீர் தந்திருக்கும் நல் வாழ்வின் ஒழுங்கு முறைகளை நான் மனப்பூர்வமாக பற்றிக் கொண்டு வாழ எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மறைவான பெலவீனங்கள்

ஒரு காரியாலயத்திலே வேலை செய்து வந்த மனிதனொருவன், பதவி உயர்வும் சம்பள உயர்வையும் விரும்பி வேறொரு கம்பனியிலே நேர்முகத்தேர்விற்காக சென்றிருந்தான். உண்மையும் உத்தமும் ஒருபக்கம் இருக்க, இந்த உலகத்தின் வழக்கப்படி அந்த வேலையை எப்படியாவது பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே அவனுடைய நோக்கமாக இருந்ததால், தன்னிடமிருந்த சில தகமைகளை சற்று மிகைப்படுத்தி, தன்னிடம் இல்லாத சில தகமைகளை தன்னிடம் இருக்கின்றது என்று கூறி, அந்தக் கம்பனியின் இயக்குனரைக் கவர்ந்து கொண்டான். இறுதியாக, இன்றைய உலகத்தின் வழக்கம் போல, அந்த கம்பனியின் இயக்குனர், அந்த மனிதனானவனை நோக்கி: உன்னிடம் உள்ள பெலவீனங்கள் (Weak Points)என்ன என்று கேட்டார். அந்த மனிதனானவன் தன்னிடமிருந்த சில பெலவீனங்களை நன்றாக அறிந்திருந்தும், இன்றைய உலகத்தின் வழக்கம் போல, சமார்த்தியமாக பதிலை கூறி, அந்த கேள்வியையும் சமாளித்துக் கொண்டான். கோணலும் மாறுபாடுமான உலகத்திலிருந்து கறைதிறையற்ற வாழ்வை வாழ வேண்டும் என்று வேறு பிரிக்கப்பட்ட சகோதர சகோதரிகளே, உலகத்திலே பல மனிதர்கள் இப்படியாக வாழ்ந்து வருகின்றார்கள். ஆனால், சில விசுவாசிகளும், தேவ சமுகத்திலே தங்கள் குற்றங் குறைகளையும், பெலவீனங்களையும் மூடி மறைத்து, சூழ்நிலைகளை சமாளித்து, சமார்த்தியமாக வென்றுவிடுவோம் என்று வாழ்ந்து வருகின்றார்கள். இருதயங்களை ஆராய்ந்தறிகின்ற கர்த்தர், மனிதர்களுடைய சிந்தை இன்னதென்று அறிந்திருக்கின்றார். அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை என்று அறிந்தும் தங்கள் உண்மையான நிலைமையை கர்த்தரிடம் கூறுவதற்கு தயக்கம் கொள்கின்றார்கள். உண்மையைக் கூறினால், இந்த உலகத்திலுள்ள எஜமானன்கள் வேலை தரமாட்டார்கள் என்று மனிதர்கள் பொய்யை உண்மையைப்போல கூறுகின்றார்கள். ஆனால், நம்முடைய எஜமானனானிய ஆண்டவர் இயேசுதாமே, பெலவீனன் என்று ஒருவரையும் தள்ளிவிடுபவர் அல்ல. பாவிகள் பாவத்திலே அழிந்து போகக்கூடாது என்று பாவிகளை இரட்சிக்கும்படியாக அவர் இந்த உலகத்திற்கு வந்தார். எனவே, பெலவீனங்களை மறைக்காமல், ஆண்டவராகிய இயேசுவினிடத்திலே அறிக்கை செய்யுங்கள். அவர் உங்களை அரவணைத்து, உங்கள்பெலவீனங்களைமேற்கொள்ள பெலன் தந்து வழிநடத்திச் செல்வார்.

**2 கொரிந்தியர் 12:9**

**என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார்.**

**ஜெபம்:** தாழ்மையிலிருந்த என்னை தூக்கியெடுத்த தேவனே, உம்முடைய சமுகத்திலே நான் என் குற்றங்குறைகளை மறைக்காமல், அறிக்கை பண்ணிவிட்டுவிடும் உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநட த்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவ சமுகத்திலே விடுதலை உண்டு

இரண்டு மனிதர்கள் ஜெபம் செய்யும்படி தேவ ஆலயத்திற்கு சென்றார்கள். ஒருவனோ தன் மதக் கிரியைகளை ஒழுங்காக நடப்பிக்கின்றவனாக இருந்தபோதும், சுயநீதியினால் உண்டான பெருமை அவனுக்குள் இருந்தது. அதனால் அவன் தன்னைத் தானே நீதிமான்னென்று நம்பி, ஜெபம் செய்யச் சென்ற மற்றய மனிதனின் பாவ வாழ்க்கையில் மனதிலே தியானம் செய்து, தேவ சமுகத்திலே அவனை அற்பமாயெண்ணி, தன், மனதிலே ஜெபம் செய்தான். தன்னுடைய இருதயத்திலிருந்த பெருமையையும் அகங்காரத்தையும் தேவனாகிய கர்த்தர் அறிந்திருக்கின்றார் என்பதையும் பெருமையுள்வனுக்கு கர்த்தர் எதிர்த்து நிற்கின்றார் என்பதையும் அவன் உணராதிருந்தான். மற்றவனோ, தான் பாவி என்பதை உணர்ந்து, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். அதனால் அவன் தேவ கிருபையை பெற்று, நீதிமானாக்க வீடு திரும்பினான். தன்னை நீதிமான் என்று நம்பின மனுஷனோ, தன் பாவங்களோடு வீட்டுக்குத் திரும்பிப்போனான். பிரியமானவர்களே, "தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல. ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய் கையாயிருக்கிறோம் அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்." எனவே நாம் எத்தகைய நற்கிரியைகளை எவ்வளவு அதிகமாக செய்து வந்தாலும், நாம் கர்த்தருடைய சமுகத்திலே அனுதினமும் நம்மைத் தாழ்த்தி அவருடைய சமுகத்திலே நம்முடைய உள்ளான மனிதனுடைய யோசனைகளை ஆராய்ந்து அறிய வேண்டும். நற்கிரியைகளை நடப்பிக்க, கர்த்தரே நம்மில் செய்கையையும் விரும்பத்தையும் ஏற்படுத்துகின்றார். எனவே இரவும் பகலும் தேவ வார்த்தைகள் நம்முடைய தியானமாக இருக்க வேண்டும். தேவசமுகத்திலே நாம் எப்போதும் தாழ்மையுள்ளவர்களாக காணப்பட வேண்டும். நாளுக்கு நாள் உள்ளான மனிதனானது கிறிஸ்துவின் சாயலிலே வளர்ந்து பெருக வேண்டும்.

**லூக்கா 18:14**

**தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்.**

**ஜெபம்:** என் உள்ளந்திரியங்களை அறிந்த தேவனே, உம்முடைய சமுகத்திலே நான் தாழ்மையுள்ள இருதயத்தோடு சேரவும், சுயநீதி யானது என்னில் தலைதூக்காதபடிக்கு, நீர் எனக்கு உணர்வுள்ள இருய த்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மீண்டும் கட்டுகின்ற தேவன்

சில ஆண்டு காலமாக கர்த்தரோடு இருந்து, அவருக்கு ஊழியம் செய்து வந்த ஒருவன். தேவ வெளிப்பாடுகளை பெற்று, இயேசுவே ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து, இந்த உலகத்தை மீட்க வந்த மெசியா என்று அறிக்கை செய்தவன். ஆண்டவராகிய இயேசு தாமே, பிதாவாகிய தேவனால் கனத்தையும் மகிமையையும் பெற்ற போது, அவரோடேகூட அவனும் பரிசுத்த பருவதத்திலிருந்து, வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக் கேட்டவன். அவருடைய நாமத்திலே பல அற்புதங்களை நடப்பித்தவன். இயேசுவை கனப்படுத்த முந்திக் கொண்டவன். ஆனாலும், ஒரு சந்தர்பத்திலே, தன் எஜமானனாகிய இயேசுவை எனக்கு தெரியாது என்று, ஒரு முறையல்ல, மூன்றுமுறை மறுதலித்து விட்டான். இந்த உலகின் போக்கின்படி, தன் எஜமானனை ஒருவன் மறுதலிப்பவனாக இருந்தால், அவன் அதிக தண்டனைகளை பெற்று, எஜமானனிடத்தில் எந்த பங்கோ பாகமோயின்றி, அவன் அவமானத்தோடு அகற்றப்படுவான். தன் எஜமானனாகிய இயேசுவை மறுதலித்த அந்த சீஷனாகிய பேதுரு, தன் எஜமானனாகிய இயேசுவை அறிந்திருந்ததால், அவன் தன் பெலவீனத்தை மூடி மறைக்காமல், தன் குறைவை ஏற்றுக் கொண்டு, மனம் கசந்து அழுதான். அவனுடைய இருதயத்தை அறிந்த எஜமானனாகிய இயேசுவோ, பேதுருவை மறுபடியும் ஏற்றுக் கொண்டு, அவனை தேற்றி, தன் சீஷர்களுக்கள் அவனை முதல்வனாக நியமித்தார். தேவ அழைப்பைப் பெற்ற பிரியமான சகோதர சகோதரிகளே, நீங்கள் எந்த நிலைமையில் இருந்தாலும், ஒருவேளை நீங்கள் உங்களை கனம்பெற்ற பெரிய ஊழியக்காரன் என்று கருதினாலும் அல்லது ஒன்றும் ஆகாத அற்பமானவனென்று கருதினாலும், கர்த்தரிடத்திலே இரக்கங்கள் உண்டு என்பதை அறிந்தவர்களாக, உங்கள் குற்றங் குறைகளை மூடி மறைக்காமல், நீங்கள் மீண்டும் கட்டப்படும்டிக்கு, எந்த நிபந்தனைகளுமின்றி உங்களை அவரிடம் முற்றாக ஒப்புக் கொடுங்கள். ஒருவேளை நீங்கள் கடையான திசைமற்றும் துரத்துண்டுபோனது போல தள்ளப்பட்டுப் போனாலும், அவர் மீண்டும் உங்களை கட்டுவதற்கு தயை பெருத்தவராக இருக்கின்றார். ஆண்டவராகிய இயேசு உங்கள் பாவங்களை மன்னித்தால், அதைக் குறித்து யார் நியாயம் பேச முடியும்? எனவே தாழ்மையுள்ள இருதயத்தோடு கிருபாசனத்தண்டையிலே தைரியத்தோடு சேருங்கள்.

**எரேமியா 24:6**

**அவர்களைக் கட்டுவேன், அவர்களை இடிக்கமாட்டேன், அவர்களை நாட்டுவேன், அவர்களைப் பிடுங்கமாட்டேன்.**

**ஜெபம்:** அன்பின் தேவனே, காலங்கள் கடந்து சென்றாலும், எத்தனை ஆண்டுகளாகஅனுபவமிக்கவனாக இருந்தாலும், நான் உம்முடைய சமுத்திலே என்னை தாழ்த்தி மனந்திரும்புகின்ற இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.